www.tamilarangam.net


சர்வதேச
# தமிழர்
**Sarvadesa Tamiler**
(INTERNATIONAL TAMILS)
ஆசிரியர்:
என்.எஸ்.பிரபு,



லண்டனில் வயலின் அரங்கேற்றம்:
சி.அதித்ரா, ம.மைதினி, சி.அபிராமி, ம.அனுஜா


ஆரணி பாலசுந்தரம், லண்டன்


சுஜாளினி ஞானப்பிரகாசம், அவுஸ்ரேலியா


துஷ்யா அமரசிங்கம், நோர்வே

பரதநாட்டிய அரங்கேற்றம்




கல்யாணி சிவஞானம், நோர்வே




ஸ்ரீசாந்தன் பார்த்திபன், லண்டன்


வல்வை பா.பாலேந்திரன்

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & Solidarity!**

www.tamilarangam.net

## வாசகர் கடிதம்:

**பேரன்புடையீர்,**

நல்லெண்ணத்தூதுவராய் தமிழ் நாடுவந்தமைக்கும்,எம் இல்லம் வருகை தந்தமைக்கும் நன்றி! வந்தார்!கண்டார்!வென்றார்! என எங்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திவிட்டீர்கள் என்பது திண்ணம்.

**பி.சத்தியநாராயணன்,இந்தியா**

---

**உயர்திரு ஆசிரியருக்கு,**

தமிழ்நாடு சுற்றுலா வந்து தாங்கள் எம்மை சந்தித்தநாளை என்வாழ்நாளில் மறக்கமுடியாதநாளாக கருதுகிறேன்.அவ்வளவுமகிழ்ச்சி அன்று! அன்று முழுவதும் சந்தோசத்தில் தூக்கமே வரவில்லை!

**இரா.இரவி -மதுரை**

---

**மதிப்புக்குரிய தோழருக்கு,**

எமது வணக்கங்கள்!சர்வதேச தமிழர் சஞ்சிகை கிடைக்கப்பெற்று, மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். மேலூர் சிறப்புமுகாம் ஈழஅகதிகள் அனைவருமே படித்துப்பயன் பெற்றனர். அனைவரும் தமது மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவிக்கும் படி கூறினர்.மேலும் இச்சஞ்சிகையை தொடர்ந்து படிக்க விரும்புகிறோம்.தொடர்ந்து அனுப்பிஉதவுவீர்களாயின் மிக்க நன்றியுடையோம். *11.09.96* தொடக்கம் *23.09.96* வரை எமது உண்ணாவிரத போராட்டம் இடம்பெற்றது.தமிழக சிறப்புமுகாம்கள்,சாதாரணஅகதிமுகாம்கள்,அகதிகள் பற்றிய செய்திகளை அவ்வப்போது,அனுப்பி உலகதமிழர் அறிய உதவுவோம். எம் கடிதங்களை அவ்வப்போது வெளியிட்டு,எமக்கு நீதிகிடைக்க தாங்கள் உதவுவதற்கு மிக்கநன்றி.தொடர்ந்து தாங்கள் ஆதரவும்,உதவியும் தரவேண்டும். நாம் விடுதலைபெறவேண்டும்.தங்கட்கும்,தோழர்கட்கும் வாழ்த்துகள்!

**எஸ்.பாலச்சந்திரன்**
**மேலூர் சிறப்பு முகாம்-மதுரை**

(லண்டனில் உள்ள:

**Human Rights for Tamils,**
**PB.6795,London E6 15B,UK**

எனும் அமைப்புக்கு தமிழில் உங்கள் விபரங்களை அனுப்பியும் சர்வதேசமன்னிப்புசபைக்கு விடயத்தை எடுத்துச்செல்லலாம். ஆ-ர்)

---

**அன்புடையீர்,**

வணக்கம். நலமே சூழ்க! மதுரை இணைப்பாளர் இரா.இரவி அவர்கள் மூலம்-சர்வதேசதமிழர்-பற்றி அறிந்து இம்மடலை எழுதுகிறேன். இத்துடன்-உயர்வோம்-எனும் எம்மால் நடாத்தப்படும்,இதழை அனுப்புகிறேன்.அன்புகூர்ந்து -சர்வதேசதமிழரை-அனுப்பி மாற்றீடு செய்து உதவுங்கள். சர்வதேச தமிழருடனான எம்தொடர்பு தொடர்ந்திட விரும்புகிறேன்.

**ரெ.கோ.இராசு,ஆசிரியர்,உயர்வோம்**
R.G.Centre,100,3rd floor,Madras Stores,Jalan Masjid India,50100 Kuala lumpur,Malaysia
Tel./Fax.03.2944475

---

**அன்புடையீர்,**

சர்வதேசதமிழர் இதழ் தொடர்ந்து கிடைத்துவருகிறது.உலகத்தமிழரை ஒருங்கிணைக்கும் இதழ்கள் வரிசையில் இதுவும் முக்கியமான ஒன்று என்பது மறுக்கமுடியாத உண்மை.மேற்குநாட்டு சிக்கல்கள், தமிழர் பிரச்சனைகள்,இந்திய-இலங்கை தமிழர் பிரச்சனைகளையும், வெளிச்சமிட்டு காட்டுகிறீர்கள். சிலநாடுகளில் தமிழர் நல்லபொருள் வளத்துடன் வாழ்ந்தாலும்,வறிய நாடுகளில் தெருக்களிலும்,அகதியாயும்,அடிமையாயும் வாழும் வாழ்வு கவலைதருவது.சொந்தநாட்டிலே தமிழர் அகதிகளானநிலை ஏன்? சிந்தித்து செயல்படின் அனைத்துக்கும் தீர்வு கிடைக்கும்.விடியலை நோக்கி நம்பயணத்தை தொடக்குவோம்.ஒவ்வொருவரும் தத்தம் பங்கினை தமிழர் விடியலுக்கு வழங்குவோம்.புரட்சிகர தமிழ்சமுதாயத்தை உருவாக்குவோம். தங்கள் உயர்ந்தபணி தொடரட்டும்.பாரெங்கும் தமிழ்முழக்கம் ஒலிக்கட்டும்.

**சுப.கரிகால் வளவன்,ஆசிரியர்-அந்தமான் முரசு,**PB.295, 315,Aberdeen Bazaar,Port Plair, Andamans 744 101,India

---

**அன்பின் ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் இதழ் கண்டு மிக்கமகிழ்ச்சி!ஜப்பானில் அண்ணாயிசம்-பற்றிய என் கட்டுரை கண்டு மேலும் மகிழ்ச்சியடைந்தேன். ஜப்பானில் தமிழர் எண்ணிக்கை மிகமிகக்குறைவு.எனக்குத்தெரிந்த தமிழர்களும் ஒருவரும் இல்லை. இத்துடன் -எம்.ஜி.ஆர்படங்கள்: ஒருநோக்கு,பிற கட்டுரைகளும்- எனும் ஆங்கிலநூலை சர்வதேச தமிழருக்கு அன்பளிப்பாக வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.நன்றி

**டாக்டர் சச்சி சிறிகாந்தா-ஜப்பான்**

## சர்வதேசதமிழர் தகவல் சேவை

---

### 1.சர்வதேச தமிழர் -லண்டன் சிறப்புமலர்-வெளியீடு:28.09.96

லண்டன் ஹரோ ஆசிரியர்நிலைய, மண்டபத்தில் வழக்கறிஞர்.எஸ்.பரமலிங்கம்,தலைமையில் தமிழ்வாழ்த்துடன், திருமதி.தவமணி மனோகரன் மங்கல விளக்கேற்ற ஆரம்பமாகியது.செல்விகள் தர்சனா நவேந்திரன்,சியாமினி.சிவானந்தம்,சங்கீதா. பரமலிங்கம் ஆகியோரின் சிறுவர்நிகழ்ச்சியும், கவிஞர்கள் செ.நாகேந்திரன்,ச.ஸ்ரீரங்கன், செ.ஆனந்தவரதன்,என்.எஸ்.பிரபுஆகியோர் கவியரங்கும்,திரு.சிறீகாந்தலிங்கம்,திரு.ரவி சுந்தரலிங்கம்,திரு.ஆ.வே.பஞ்சாட்சரம்,திரு. நேமிநாதன் ஆகியோர் இதழ்ஆய்வும், திரு.மா.யோகேஸ்வரன் இசைநிகழ்ச்சியும் இடம்பெற்றன. திரு.சந்திரசேகரம் பரமலிங்கம் தன் தலைமையுரையில் சர்வதேசதமிழர் சேவையை பாராட்டி ஒவ்வொரு ஆண்டும் லண்டனில் சிறப்பிதழ் வெளியிடவேண்டும்!என வேண்டுகோள் விடுத்தார்.

இவர் சிறப்பிதழை வெளியிட பிரிட்டிஷ் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட பொறியியல்ஆலோசகர் திரு.சோமசுந்தரம் கனகசுந்தரம் முதலாவதுபிரதியை பெற்றிட பல லண்டன் தமிழர்கள் சிறப்புப்பிரதிகளை பெற்றுகௌரவித்தனர். ஆசிரியர் என்.எஸ்.பிரபு சர்வதேசதமிழர் இதழின் நோக்கு,போக்கு,தமிழகஅனுபவம் பற்றிய சிறப்புரையும், சிறப்பாசிரியர் செல்லத்துரை ஆனந்தவரதன் நன்றியுரையும் வழங்கினர்.

வெகுசிறப்பாக விழாவையும்,மலரையும் ஒழுங்குசெய்த சிறப்பாசிரியர் செ. ஆனந்தவரதன்,வாசன் பிரிண்டர்ஸ், நண்பர்கள்குழாம் நன்றிக்குரியவர்கள்

### 2.சர்வதேச தமிழர் -தமிழகச் சிறப்பிதழ்:

எழுத்தாளர் திருமதி.விஜயலட்சுமி மாசிலாமணி,டாக்டர்.வ.மாசிலாமணி அவர்களை சிறப்பாசிரியர்களாயும், எக்ஸ்னோரா எம்.பி.நிர்மல்,திரு.ஏ. மனோகரன்,திரு.பி.சத்தியநாராயணன், திரு.எஸ்.பாஸ்கரன் ஆகியோரை ஆசிரியர்குழுவாயும் கொண்டு, தமிழக சிறப்பிதழ் வெளிவர உள்ளது.தமிழ்சமுதாயமுன்னேற்றத்துக்குதவிய 100 அமரர்கள் வரலாறும்,25 தற்கால தமிழர் பேட்டியும் எழுதுவதுடன் அவர்களை கௌரவிக்கவும் எண்ணப்பட்டுள்ளது.சகலஆக்கங்கள்,விளம்பரங்கள்,ஆலோசனைகள் அனுப்புக:

**திருமதி.விஜயலட்சுமி மாசிலாமணி,**
100,தென்றல்,அன்னை தெரசா நகர் மடிப்பாக்கம்,சென்னை-600 091, இந்தியா. தொ.பேசி:*009144.2340018*

**டாக்டர்.வ.மாசிலாமணி**
Dept.of Physics,Anna University, Madras-600 025,India/ Tl.2351723 Ext.3161 Fx.2350299 ,2350397

---

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது. ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி! தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நோர்வேயும் ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தமும்!**

நோர்வேயின் புதிய பிரதமர் தூர்பியோண் யக்லாந்த்,முன்னாள் பிரதமர் குறுகாலம் புறுண்லாந்த் போல், நோர்வே,ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் வகிக்க வேண்டும் எனும் அணியைச்சார்ந்தவர்.

1994 நவம்பர் 28 வாக்கெடுப்பில் ஐயூனியனில் சேர்வதில்லை! என நோர்வேமக்கள் தீர்ப்பளித்தாலும், ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம் நோர்வேயை இறுக்கமாகப் பிணைத்துள்ளது எனலாம்.

15ஐயூனியன் நாடுகளுடன் ஐஸ்லாந்த்,லீச்ரென்ஸ்ரைனும் நோர்வேயும் இதில் அடங்கும்.

01.01.94ல் இவ்வொப்பந்தம்,நடைமுறைக்கு வந்தது. சுதந்திரமான முறையில் பொருட்கள்,சேவைகள், முதலீடு,தொழிலாளர் ஐரோப்பியயூனியனில் அசைவதுடன்,ஆராய்ச்சி–அபிவிருத்தி,கல்வி,நுகர்வோர்கொள்கை,சூழல்பாதுகாப்புகொள்கை,புள்ளிவிபரம்,தொழில்நிலைமை ஆகியன,குறித்தும் ஒத்துழைப்பை இது கொண்டிருக்கிறது.

நோர்வே வர்த்தகமும், தொழில்துறையும் மற்றைய மேற்கு ஐரோப்பிய நாடுகள் போல் சமஉரிமையுடன் போட்டியிட இவ்வொப்பந்தம் வழிவகுக்கிறது.

1973ன் ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இதனால் மாற்றீடுசெய்யப்பட்டு ஐரோப்பியபொதுச்சந்தை எனும் நோக்கம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தவிதிகள்,நோர்வேயின் சட்ட,விதிகளுள் தனது பிரசைகள்,கம்பெனிகட்கு பிரயோகிக்கக்கூடியதாக உள்ளடக்கப்பட்டு வருகிறது. எனினும் நோர்வே,பாராளுமன்ற சட்டஅதிகாரம் இந்த ஒப்பந்திற்கு கையளிக்கப்பட்டு மாற்றப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தை அனுசரித்தே இங்கு சட்டங்கள் ஆக்கப்படும். பொருட்களின் சுதந்திரஅசைவில் விவசாயகொள்கைகட்கு விலக்கு உண்டெனினும் காலப்போக்கில், விவசாயஉற்பத்திகட்கும்,இவ்வொப்பந்தம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.இதுவரை நோர்வே,தென் ஐரோப்பியநாடுகளில் உற்பத்தியாகும் 60 விவசாயஉற்பத்திகட்கு வரி இல்லாமல் செய்துள்ளது.

அதேபோல் நோர்வே பழவகைகள், காய்கறிகள் சில ஐரோப்பியயூனியன் சந்தையில் வரிசலுகைபெறுகின்றன. மீன்,கடல்உணவு ஏற்றுமதிக்கு இவ்வொப்பந்தம் அதிகமாக வழிவகுத்துள்ளது.மீன்உற்பத்திகட்கு முற்றான,பகுதியான வரிச்சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.நோர்வே மீன்தொழில்துறைக்கு புதியசந்தர்ப்பங்களை இந்த ஒப்பந்தம் அளித்துள்ளது.

வரிகள்,கோட்டாக்களுடன் உற்பத்தி விளக்கம்,கட்டுப்பாட்டுமுறைகளும் மறைமுகமான வர்த்தகதடைகளை நாடுகட்கிடையே கொண்டுள்ளன. இதனை இந்த ஒப்பந்தம் ஒருமுகப்படுத்தி சிக்கலற்றதாக்கும்.

அபாயகரமான பொருட்கள்,உற்பத்திகள் பற்றிய தன் தேசியவிதிகளை நோர்வே கொண்டிருக்கும் அதேசமயம் பொதுவானவிதிகளுக்கான ஒத்துழைப்பு ஆரம்பமாகிவிட்டது. யந்திரங்கள்,கட்டிடபொருட்கள்,தொலைதொடர்பு உபகரணங்கள் பற்றிய ஐரோப்பிய உற்பத்திவழமைகள் ஐரோப்பியதரக்கட்டுப்பாட்டு அமைப்பால் நிர்ணயிக்கப்படும்.அதன்படி அமையும் உற்பத்திகட்கே சான்று ,உள்செல்ல உத்தரவாதமுமுண்டு. சகல அரசமானியமும் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் போட்டியை பாதிப்பதால் பொதுவாக தடுக்கப்பட்டுளது எனினும்,சூழல் பாதுகாப்பு,பயிற்சி,ஆராய்ச்சி துறைகள் இங்கு விலக்குபெறுகின்றன. தனியான கம்பனிகள்,வர்த்தகங்கள், பிரதேசங்கள் சில தேசியஉதவிக்கு உரித்தானவை.செறிவற்ற சனத்தொகையுள்ள,பிரதேசங்களும் இத்தகைய தேசியஉதவிக்கு உரித்துள்ளன. முதலீடுகள் ஒப்பந்தநாடுகளிடமிருந்து எங்கும் அசையலாம். தேசிய விதிகள் தேசிய,அந்நியகம்பனிகட்கு முதலீடு குறித்து பாரபட்சம்,கட்டுப்பாடு காட்டமுடியாது.இதற்கமைய நோர்வேயின் முந்திய சலுகைச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

சேவைகள்: வீதிப்போக்குவரத்து, ரயில்வே,விமானசேவை,நிதிசேவைகள்(வங்கி,காப்புறுதி,பங்குவிற்பனை) தொலைதொடர்பு,தொலைகாட்சிசேவைகட்கிடையே ஒரு சமமானவிதிகளை இந்த ஒப்பந்தம் கொண்டிருக்கும்.நோர்வே பாரிய சேவை பரப்பை பெறுவதால் பலன்பெறும். தொழிலாளர் சுதந்திரஅசைவுடன், சூழல்பாதுகாப்பு,தொழில்சூழல்,சமஉரிமை,தொழிலாளர்சட்டம்,நுகர்வோர் பாதுகாப்பு,ஆராய்ச்சி–அபிவிருத்தி,கல்வி,கலாசாரம்,உல்லாசபிரயாணம்,தகவல்சேவை,புள்ளிவிபரம்,ஆபத்துகட்கு தயாராதல் போன்றவிடயங்களில் அதிகளவு,ஒத்துழைப்புண்டு. பொதுவான சூழல்பாதுகாப்புவிதிகள்,கொள்கைகள் குறைந்தளவாவது தரக்கட்டுப்பாட்டை அமுல்செய்ய வழிவகுக்கும்.ஆனால் கடுமையானவிதிகளை தனியானநாடுகள் கொண்டிருக்கலாம்.


தூர்பியோண் யக்லாந்த்

ஐரோப்பிய சுதந்திரவர்த்தக ஒப்பந்த(E.F.T.A.) நாடுகள் ஐரோ.பொருளாதார ஒப்பந்தத்தை(E.E.A.) மீறாமல் இருப்பதை கண்காணிக்க கண்காணிப்புஅதிகாரசபையும்,நீதிமன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

நோர்வேபொருளாதாரம் ஐரோப்பாவிலேயே மிகதிறந்தபொருளாதாரமாகும்.மொத்த ஏற்றுமதி,இறக்குமதி பெறுமதியானது,மொத்தஉள்நாட்டு உற்பத்தியின் 40வீதமாகும்.

நோர்வே வெளிநாட்டுசந்தையை பெரிதும் நம்பியிருப்பதால் சமமான நீதியான போட்டிநிபந்தனைகளை GATT,OECD,EFTA முதலிய சர்வதேசஅமைப்புகளில் அங்கம்வகிப்பதன் மூலம் நம்பியுள்ளது.

1992ல் நோர்வேயின் 80வீதமான ஏற்றுமதி 15 ஐரோப்பியயூனியன் நாடுகட்கு விற்கப்பட்டது.

அதேவருடம் 70வீதமான, இறக்குமதி ஐரோப்பியயூனியன் நாடுகளிடமிருந்து பெறப்பட்டது.

நோர்வே ஏற்றுமதியாளர் ஐரோப்பிய யூனியன் விதிகளை பின்பற்றியே வருகின்றனர். எனினும் சில உற்பத்திகளை சிலநாடுகள் இங்குகொட்டுவதை தடுக்க பாதுகாப்புகள் எடுக்கப்படாததால் சிலகம்பனிகள் பாதிக்கப்படுகின்றன.அதனை தடுக்க எதிர்ச்சட்டம் போடமுடியாது, ஐரோப்பியபொருளாதார ஒப்பந்தம் தடுக்கிறது.இந்தவிதி மேற்குஐரோப்பியசந்தை முழுவதுக்குமுண்டு. நல்லஇயற்கைவளம்,நன்கு படித்த தொழிலாளர்,ஸ்திரமான,அரசியல்–சமூகநிலை,பலமான அரசுநிதி,திடமான பொருளாதாரம் நோர்வேக்கு நல்லஎதிர்காலத்தையே அளிக்கும்.

Norway and E.E.A.......N.S.Pirabu.

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் /யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழ்நாட்டுக்கடிதம்:

## பண்பாட்டில் ஒரு பரிமாற்றம்!

1983 இலங்கை இனக்கலவரத்தில் நடந்த தமிழர் இனப்படுகொலை காரணமாக தமிழ்நாட்டில் வந்திறங்கிய ஈழத்தமிழ்அகதிகட்காக காப்பகமாக தமிழ்நாடுஅரசால் இராமேஸ்வரம் மண்டபம்முகாம் அமைக்கப்பட்டது. 13 ஆண்டுகளாக இங்கு வாழும் ஈழத்தமிழர்களால் மண்டபத்தைச்சுற்றியுள்ள ஊர்வாழ்மக்கள் ஒரு பண்பாட்டு மாற்றத்துக்கே ஆளாகியுள்ளனர்உணவுமுறை, ஆடைகள்,வாழும்வகை போன்றவை இந்தமாற்றத்திற்குள் அடங்கும்.

அரசுஅளிக்கும் உதவித்தொகை போதாததால் முதலில் தமது ஆடைகளை விற்கத்தொடங்கினர். மண்டபம்,வேதாலை,மெய்கூண்டு, மரைக்காயர் பட்டினம், போன்ற கிராமங்களில் வாழும் பெண்கள் வாங்கி அணிந்தனர்.இரவுஆடைகளை மிகவும் வியப்புடன் வாங்கி அணிந்து மகிழ்ந்தனர்.

மண்டபம் முகாமில் தங்கியுள்ள 400குடும்பங்கள் அடங்கிய சுமார் மூவாயிரம் பேரில் பலபெண்கள் கூலிக்கு பிளவுஸ் தைத்து தருகிறார்கள்உள்ளூர் தையற்காரரைவிட மிகவும்குறைந்தகூலிக்கே தைத்து தருவதால் சுந்தரன்உதயன்கிராமத்து பாமரபெண்கள் கூட தற்பொழுது,நவநாகரிக –லோகட்–பிளவுஸ்களுடன் உலாவிவருகின்றனர்.

உள்ளூர் மக்களைவிட அகதிகள் குறைந்தகூலிபெற சம்மதிப்பதால் கட்டடப்பணிகட்கு,பெரிதும்அகதிகளையே பயன்படுத்துகின்றனர்.

ஈழப்பெண்களின் கள்ளமில்லா,சுதந்திரமான போக்கை அங்குவாழும் கிராமப்புற பெண்களும் பின்பற்றி வருகிறார்கள்.பேரூந்துகளில் ஆண்களின் அருகில் இருந்து பயணம் செய்வதும்,திரையரங்குகளில் ஆண்களின் அருகில் அமர்ந்து படம்பார்ப்பதும் இப்பொழுது அங்கே வழக்கமாகிவிட்டது.

உள்ளூர்மக்கள் கோவிலில் திருமணம் செய்துகொள்வது வழக்கம். ஆனால் தற்பொழுது கோவிலில் மணமுடித்தபின் அதனை பதிவாளர் அலுவலகத்தில்(ஈழஅகதிகள் இந்தியாவில் மணம்புரிந்தால் பதிவு செய்வது போன்றே)பதிவுசெய்கிறார்கள்.

மாற்றம் சமையல்அறைக்குள்ளும் விளைந்துள்ளது.எள்எண்ணெய் பயன்படுத்திவந்த,மண்டபமுகாமைச் சுற்றியுள்ள இந்தியகுடும்பங்கள் இப்பொழுது சமையல்அறையில் சமையலுக்காக தேங்காய்எண்ணெய் பாவிக்கிறார்கள்.மிளகாய்,வெங்காயம் வைத்து அரைத்த காரமான சட்னியையே வைத்து உண்கிறார்கள்.

இங்குள்ள ஈழமக்கள் காப்பியையோ தேனீரையோ அருந்துகையில்,ஒரு கையில் பால்இல்லாத வெறும் காப்பி அல்லது தேனீரை வைத்துக்கொண்டு மறுகையில் சர்க்கரை அல்லது வெல்லத்தை வைத்துக்கொண்டு இரண்டையும் மாறிமாறி சுவைப்பார்கள்.தற்பொழுது உள்ளூர் மக்களும் இதனைப்பின்பற்றத் தொடங்கி வெறும் பாலில்லாத காப்பி அல்லது தேனீர் மட்டும் அருந்துகிறார்கள்.

தமிழ்ஒலி உச்சரிப்பிலும் மாற்றம் வந்திருக்கிறது.ஆம்!,என கேள்விகட்கு பதிலளிப்பதைவிட்டு,ஓம்!, ஓமாம்!ஓமோம்!என்கிறார்கள்.

இராமேஸ்வரத்தில்,மேல்நிலை வகுப்புமாணவர்கள் கூட, ஈழத்தமிழ் உச்சரிப்பையே பெரிதும் விரும்புகிறார்கள்.

இத்தகைய ஒன்றுபட்டவாழ்வு,ஈழப்பெண்கள்,உள்ளூர் ஆடவர்களையும்,உள்ளூர்பெண்கள் ஈழஆடவர்களையும் மணந்துகொள்ளவும் வழிவகுத்திருக்கிறது.

இராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடிப்புக்கும்,முன்னேற்றத்துக்கும் ஈழஅகதிகள் உதவிவருகிறார்கள். இராமேஸ்வரம் வாழ்மீனவர்களை விடவும்,அகதிகளுக்குத்தான் மீன்பிடித்தல் குறித்த உத்திகளும்,மீன்களின் போக்குபற்றிய அறிவாற்றலும் அதிகம். இருப்பினும் உதவியாளர்களாகவே இருந்து பணிபுரிகிறார்கள்.

இந்தியன் எக்ஸ்பிரஸில்(ஆக.21) வெளியான இந்த விபரங்களை –சர்வதேசதமிழர்–வாசகர்களுடன் பகிர்வதில் மகிழ்வடைகிறேன்.

புதுச்சேரி நிதிநிலை அறிக்கையின் போது–புதுச்சேரி–பெயர்மாற்றம் அறிவிக்கப்படாததால் போராட்டம் ஒன்றை தமிழ்வளர்ச்சி நடவடிக்கை குழு நடாத்த திட்டமிட்டுள்ளது.நன்றி!மீண்டும் சந்திப்போம்.

ச.வேல்முருகன்–இணைப்பாளர்
10,பெருமாள்கோவில் தெரு,
முத்தியால்பேட்டை,
புதுச்சேரி 605003, இந்தியா

## மதுரை சிறையிலிருந்து.......!

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**

இங்கு எனக்கு வரும் கடிதங்கள் பல கைக்கு கிடைக்காது தவறிப் போகின்றன.இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.இங்கு எனது கடிதங்கள் யாரால்?ஏன்? தவறுகின்றன, என்பதை தங்களால் புரிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன்.

எனது முந்திய –ஈழத்தமிழனின் தமிழகசிறைவாசம்– கடிதம் சர்வதேசதமிழரில் வெளியானது,குறித்து புதுச்சேரி இணைப்பாளர் ச.வேல்முருகன் எனக்கு அறிவித்தார். மிக்க நன்றி!

என்மீது போடப்பட்ட பொய்வழக்கின் விசாரணை இன்னும் முடியவில்லை.தற்போது புதுநீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் இவ்வழக்கை விசாரிக்கும் 4 வது நீதிபதி. நீதிபதிகள் மாறுகின்றனர்.வருடங்கள் கழிகின்றன.இன்னும் குற்றமற்ற எனக்குரிய நீதி வழங்கப்படவே இல்லை.கடந்த 6 வருடமாக அநியாயமாக சிறையில் உள்ளேன். பொய்வழக்கு போட்டதுடன்,போட்ட வழக்கையும் முடிக்காமல் வேண்டுமென்றே தாமதம் செய்யப்படுகின்றது.தமிழ்நாட்டில் புதியமுதல்வரின் தலைமையின் கீழ், ஈழத்தமிழனான எனக்கு இன்னமும் ஏன் நீதி மறுக்கப் படுகிறது?

எனவே இதனை உலகத்தமிழர்கட்கும்,சர்வதேச மன்னிப்புச்சபைக்கும் எடுத்துக்கூறி விரைவில் இச் சிறைக்கொடுமையிலிருந்து ஒரு அப்பாவி ஈழத்தமிழன் விடுதலை பெற தாங்கள் உதவும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

இலங்கையில் மட்டுமன்றி, தமிழ் நாட்டிலும் ஈழத்தமிழர்க்கு நீதிமறுக்கப்படுகிறது என்பதற்கு எனது வழக்கு சிறந்த உதாரணமாகும்.

**எஸ்.பாலச்சந்திரன்-30.08.96**

(உலகத்தமிழர்கள், தமிழமைப்புகள் தமிழகமுதல்வருக்கு இதுகுறித்து பாலச்சந்திரனை உடன்விசாரணை செய்து,விடுதலைசெய்யுமாறுகோரி ஆதரவுக்கடிதங்களை அனுப்புமாறு,அன்புடன் வேண்டுகிறோம்.ஆர்)

**Hon.Dr.M.Karunanithi,**
**Chief Minister,**
**St.George Fort,Chennai,**
**Tamilnadu,India.**
**Fax.00.91.44.561441**

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்மின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

www.tamilarangam.net

# வாழ்க்கை என்றொரு ஒப்பந்தம்

கோபம், வெறுப்பு எல்லாரையும் எளிதில் ஆட்கொள்ளும் உணர்ச்சிப் பிழம்பு. ஆனால் பொறுமை, அன்பு முதலியவற்றை உறுதி படைத்தவர்கள் தான் மேற்கொள்ள இயலும். அதிலும் இன்று நான் மிகவும் எளிதாக கோபப்பட்டு விட்டேன். கோபத்தில் சிவராமனை வெறுப்பேற்றி விட்டு, அவனது புறங்கையால் வாங்கிக் கட்டிக் கொண்டாயிற்று. கீழ்த்தாடை விண் விண்ணென்று வலித்தது.

அடித்துவிட்டுப் போனவன் 'மந்திகை' வைத்தியசாலையில் கிடக்கிறான் என்று யாரோ வந்து தகவல் சொன்னபோது நம்பவே முடியவில்லை..! குண்டடிபட்ட காயத்தில் வலது கால் உடைந்து, தசைகள் நார் நாராகத் தொங்குகிறதாம்.. இதைக் கேள்விப்பட்டபோது, காலையில் நடந்த சச்சரவுகள் யாவும் மறந்து, மனசு முழுக்க சிவசு ! சிவசு ! என்று ஒரு கதறல் வெளிப்பட்டு உடலெங்கும் அமிலமாய் எரிவதாய்ப்பட்டது.

ஓட்டமும் நடையுமாக, வீட்டு உடை கூட மாற்றிக் கொள்ளத் தோன்றாமல் மாமா வீடு போய், விபரம் தெரிவித்து, மாமாவுடன் அந்தக் கடகடா சைக்கிளின் பின்புறம் அமர்ந்து கொண்டு, மந்திகை வந்தடைந்தபோது உடலெல்லாம் வியர்த்து விட்டது. இடையில் தென்பட்டவர்களை இடைத்துத் தள்ளிக் கொண்டு, வார்ட்டிற்குள் நுழைந்து, அத்தனை பேருக்குள்ளும் அவனை அடையாளம் கண்டு. விரைந்தோடி அவனது காலைப் பார்த்த போது, அவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அழுகை கேவலாகி வெடித்து விட்டது.

சிவராமம்_பவித்ரா காதல் ஒன்றும் காவியக் காதலில்லைத் தான். ஆனால், சிவராமன் என்கிற சிவசுவை முதன் முதலில் சந்தித்தது 751 இலக்க பருத்தித் துறை யாழ்ப்பாணம் மினிபஸ் சேவையில்தான்.

ஆடுமாட்டை அடைப்பது போல் மனிதர்களை அடைத்துக் கொண்டு அந்த பேரூந்தில் சிவசுவுக்கு எப்போதுமே மிதிப்பலகைப் பிரயாணம் தான். இடையிடையிலே தலையை பேரூந்தினுள் நுழைத்து, "அண்ணா எவடம்?" அக்கா எவடம்?" என்று கேள்வியுறுத்தி இடத்திற்குத் தகுந்த பணம் வசூலிப்பது அவனது கடமை என்பதற்காகச் செயற்படுவான்.

பவித்ரா அநேகமாக அவனது பேரூந்தில்தான் ஏறுவாள். புத்தூர் தரிப்பிலிருந்து யாழ் வரை வருவாள். அவளது நெஞ்சோடு அணைத்த கைகளில் நீள நீள சீ.ஆர் கொப்பிகள் உறங்கிக் கொண்டிருக்கும். நேர்த்தியாக உறையிட்டு அவற்றின் வலது மூலைகளில் பவித்ரா, க.பொ.த உயர்தரம் என்றிருக்கும். எழுத்துக்களில் அவளது பெயரிற்கு வரும் நான்கு எழுத்துக்களையும் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்கையில் சிவசு மனசுக்குள் சங்கீதத்தை உணர்வான். எல்லோரிடமும் பிரயாணக் கட்டணத்தைக் கேட்டு வாங்கி விடுபவன், பவித்ராவிடம் மட்டும் கேட்டுப் பழக்கமில்லை. ஆரம்ப நாட்களில் அவளாகத் தரும் பொழுது வாங்கிக் கொண்டிருக்கிறான். நாள் செல்லச் செல்ல மெல்லத் தலையாட்டிவிடுவான். அவளும் கட்டாயப் படுத்துவதில்லை! அப்படிக் கட்டாயப் படுத்தப் போய் அவனுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துவானேன்.. என்கிற நல்லெண்ணம்!

நாளடைவில் அவளுக்கும் அவன்மேல் ஒரு ஈடுபாடு ஏற்படுவதாக அவள் உணரத் தலைப்படுகையில் டியூஷனுக்காக பிரயாணிப்பதை விடுத்து, பிரயாணித்தலுக்காகவே டியூஷன் போய்க் கொண்டிருப்பதையும் உணர்ந்தாள். அவனோடு பிரயாணிக்கிற அந்த அரை மணித்தியாலங்களும் தான் எத்தனை இனிமையானவை.

இப்படித்தான் ஒரு பிரயாணத்தில்..

"நீங்கள் ஏன் பேருந்துக்குள் சிகரெட் பிடிக்கிறீர்கள் ஐயா?" என்றான் சிவராமன், பிரயாணி ஒருவரிடத்தில்!

"பிடிக்காவிட்டால் அது கீழே விழுந்துவிடும் தம்பி!" என்றார். பேரூந்துக்குள் இருந்த கூட்டம், கொல்லென்று சிரித்தது.

"பெரியவர் எந்த இடம்?" பெரியவர் வசிப்பிடத்தின் பெயர் சொல்ல, இருவரும் அந்நியோன்னியப்பட்டுப் போனார்கள்.

"பெரியவர், நீங்க நல்லா விட்டு (ஜோக்) அடிக்கிறீங்க. படிச்ச ஜோக்காக இருந்தாலும் நல்லாயிருந்தது..! என்று சிவசு வாய்ச் சான்றிதழ் வழங்கினான்.

இடையிடையே யார் யாரையோ இறக்கி, ஏற்றிக் கொண்டு பேரூந்து தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது.

"பெரியவரே நான் உங்களை ஒன்று கேட்கட்டுமா?"

"சொல்லுங்க தம்பி!"

"இரவில் பருந்துக்கு கண் தெரியுமா?"

"எனக்குத் தெரியாதுங்க தம்பி!"

"நான் உங்களுக்குக் கண் தெரியுமா என்றா கேட்டேன்? பருந்துக்கெல்லோ" என்றான். மீண்டும் கூட்டம் கொல்லென்று சிரித்தது. "இதுவும் படிச்சது தான். இரவல் ஜோக்" என்றான். சிவசு சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். சிரிக்கச் சிரிக்கப் பேசுகிற ஆண்களை பெண்களுக்கு அதிகம் பிடிக்கும். பவித்ராவிற்கும் பிடித்தது. சிவசுவும் ஒரு தீர்மானத்தில் இருந்ததால் யாழ் நகருக்குள் வைத்து, வாய்வார்த்தையாகக் கேட்டு விட்டான். பவித்ரா பாம்பாய்ச் சீறினாள். "லவ் எங்கறது ஹோஸ்ட்வி வார்த்தை. என்னமோ பொக்கட்டில இருக்கிற பொட்டலம் கடலை மாதிரிக் கேட்கிறீங்க! இப்பிடி இன்னும் எத்தினை பேரட்டை கேட்டிருப்பீங்க..? ஆழம் பார்ப்பதற்காக பவித்ரா கொட்டிய வார்த்தையில் சிவசு அவமானத்தை உணர்ந்தான். முகம் சிறுத்துப்போய் அவன் விலகிய காட்சி, இன்னும் நினைவில் நிற்கிறது.

உங்கட நண்பர் நிரஞ்சன் எவ்வளவு அன்பானவர்..! நீங்க மட்டும் ஏன் எப்ப பார்த்தாலும் இப்படியிருக்கிறியள் எண்டு புரியேல்ல. கடமுடா கடமுடா எண்டு ஓடிக் கொண்டிருக்கிற ரயில் மாதிரி.



விளம்பரம்:1.மகிழ்வான விடுமுறைக்கு மலிவான விமான டிக்கட்டுகள் ஒழுங்குசெய்துதரப்படும்
2.நோர்வேஜிய-தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்புகள்,திருமண அழைப்பிதழ் அச்சுவேலைகள்,
செல்வாங்கிலீஸ்சன் நிரப்பல்,வீடியோ படப்பிடிப்பு ஒழுங்குசெய்யப்படும்.
3.தமிழ் கலைநிகழ்ச்சிகள்,கவியரங்கு,உரைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படும்
சகல தொடர்புகட்கும் : தொலைபேசி—ஃபக்ஸ்:32.813416

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்திட்டு வந்து போறவன் எப்படிவும் சிரிச்ச முகமா, அன்பாத்தானேடி இருப்பான்.. அது மட்டுமில்லாம அவனுக் கெண்டொரு குடும்பம் அமைஞ்சு, உன்னை மாதிரி ஒருத்தியும் கிடைச்சு, கூடவே குடும்ப வண்டி தள்ளுகிற பொறுப்பையும் கொடுத்துப் பார்த்தானே அவன் நிதானமும் லொடலொடன்னு ஆடுகிறது புரியும். குடும்பத்தில சமநிலை குலையுறதுக்கு ஆயிரம் பிச்சல் பிடுங்கல் இருக்கடி! தனிக்கட்டைன்னா ஒரு சௌகரியம், உழைச்சு வர்ற காசை அம்மாட்டைக் குடுத்திட்டா எது பற்றியும் கவலையேயில்லை! குடும்பம் எண்டா அப்படியே..? கட்டினவளின்ர கற்புப் பத்தின கவலையும் கூடவே வந்திடுதோ இல்லையோ,, ?''

"என்ன கதைக்கிறியள்.. ஏன் இப்ப என்ர கற்புக்கு என்ன குறைச்சல்?'' ஈடுபாடில்லாம எப்பிடிப் புகழலாம்..?

"ஏன்தான் இப்பிடி சந்தேகப் பிசாசு உங்களைப் பிடிச்சு ஆட்டுதோ தெரியேல்லை!''

"ஆரையடி பிசாசுங்கறே?'' எட்டிக் கன்னத்தில் விட்ட விளாசலிலிருந்து தப்பிக்க முயல் கையில், மின்னலில் வந்த வீச்சாய் அவனது முஷ்டி, தாடையில் பலமாகத் தாக்கிற்று. அப்படித் தாங்கிவிட்டுப் போனவன் ஒரு காலும், அரைக்காலுமாக வைத்தியசாலைக் கட்டிலில் முடங்கிக் கிடப்பதை பார்க்கச் சகிக்க முடியவில்லை. அடித்துப் போட்ட ஊனை ஆறேழு நரிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கடித்திழுப்பதைப் போல, நெஞ்சுக் குழிக்குள் புகுந்து இதயத்தை எதுவோ கடித்துக் குதறுகிற வேதனை.

என் சிவசு கோபக்காரன்தான், சந்தேகம்தான். ஆனால், நல்ல உழைப்பாளி, தொழில் சிரத்தையுள்ள உழைப்பாளி! காதலில் வென்றாலும் சரி, தோற்றாலும் சரி மனிதர்கள் வித்தியாசமாக மாறிவிடுகிறார்கள் என்கிற உண்மை என் சிவசுவுக்குச் சற்றும் பொருந்தாது, நான் கான்டுகளுக்கு முன் அவன் என்னை நேசிப்பதை வெட்கம் விட்டு வாயராக் கேட்டபோது, அதற்கான எனது பதில், அவனுக்கு சாதகமாய் இல்லாதிருந்த போதும்கூட சற்றும் நிலைகுலையாதவன். நாடியில் தாடி வளர்த்துக் தேவதாஸ் கோலம் கொள்ளாமல் இயல்பாய் இருந்தான். ஆனாலும், என்னைக் காணும் சந்தர்ப்பங்களில் அவன் சங்கடப்பட்டான்.

மனதுக்குள்ளே அவனை நான் விரும்பியும், வெளியே வெறுப்பதுமாய் இரட்டை முகமூடி எனக்கு! அதை நானே கிழித்தெறிய வேண்டிய சூழ்நிலையை காலம் உருவாக்கிக் கொடுத்தது. நாட்கள் செல்லச் செல்ல காதல் மனதிற்குள் சிறையிருக்க மறுத்தது. ஒருநாள் வார்த்தையோடு வெளியேறியது.

என்ரை பேச்சு உங்களை எங்கேயோ சுருக்கெண்டு குத்தியிருக்குமென்னு புரிஞ்சுது. ஆனா எதுன்னு புரியலை! காதலெண்டுறது சத்தியமா விலை மதிக்க முடியாததுதான். அதுக்கான அர்த்தம் உங்களுக்குப் புரியுமா இல்லையா என்கிறதைப் புரிஞ்சுக்காம பேசின பேச்சு அது! திடீரென்று வந்து விழுகிற வார்த்தைகள் இனிப்பா இல்லாததும் ஒரு குறைதான். அதுக்காக வேணுமெண்டா ஒரு தடவைக்கு இரண்டு தடவையா மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம்.. !'' என்றாள்.

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க உண்டு புரியலை பவித்ரா! நான் 'ட்யூப் லைட்' மாதிரியும் இல்லை. 'பெற்றோல் மாக்ஸ்'..! சரியான லேட்டு! இப்பிடித் தொடுகிற மூக்கை இப்பிடியே சுத்தி வந்து எதுக்குங்க தொடணும்?'' சொல்லியபடியே நின்ற இடத்தில் சுற்றித் தொட்டுக் காட்டினான். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"நீங்க என்னை உண்மையா லவ் பண்றீங்களா?''

"நான் பொய் சொல்ல மாட்டேங்க, பவித்ரா!''

"அப்ப, உண்மையைச் சொல்லுங்க!''

"பொய் சொல்லாம இருக்கிறதே உண்மை சொல்ற மாதிரித் தானுங்களே!'' என்றான். அவனது லொஜிக்கலான பேச்சுப் பிடித்துப் போக, ஒப்பவும் முடியவில்லை துப்பவும் முடியவில்லை என்றிருந்த காதல் நிலைமாறி, பேசிப் பேசியே காதலானார்கள். பேச்சால் படிப்புக் குலைந்து போய், சீர் கெட்டது. படிப்புத்தான் வரவில்லையே கல்யாணம் கார்த்தியாவது என்று பவித்ராவின் பெற்றோர் யோசிக்க ஆரம்பித்த போது சிவராமன் வந்து நின்றான். தேவைப்பட்ட இடத்தில், தேவைப்பட்ட நேரத்தில் தேவையாக வந்து நின்றான்.

அதெல்லாம் பழைய கதை! நான்காண்டுப் பழமை! இந்த நான்காண்டில் சிவசுவுக்குக் குழந்தைகள் கிடையாது. எனக்குச் சிவசுதான் குழந்தை என்று ஆறுதல்பட்டிருந்தேன். இன்று அந்தத் திருப்திக்கும் பங்கமாய் படுக்கையில் கிடக்கிறான். சிவசு குழந்தையைப் போல் வலிக்கிறது என்றது. கன்னம் தொட்டுத் தடவி, உச்சி முகர்ந்த போது, என் கண்ணீர் முத்துக்கள் அவனது நெற்றியில் கொட்டன. காலையில் எனக்கு அடித்துவிட்டுப் போனது சிவசுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும். என் கன்னம் தொட்டு, 'வலிக்கிறதா?' என்றது. இல்லை என்பதாகத் தலையாட்டினேன். என் இனிய சிவசு உணர்ச்சி வசப்பட்டு, இனிமேல் அடிக்கவே மாட்டேன்' என்று சத்தியம் செய்தது.

காலையில் சண்டை போட்டு விட்டுப் போனதில் இருந்து பச்சைத் தண்ணீர்கூட குடித்திருக்க மாட்டான். ஏதாவது வாங்கித் தரலாம் என நகர்ந்த போது, வேண்டாம் என்பதாக தலையசைத்தான். கைபிடித்து என்னை அருகில் அமரச் சொன்னான்.

"என்ன,, ?''

"ஒண்ணுமில்லை..''

"பரவாயில்லை, சொல்லுங்கோ..''

"ஆண்டவன் எந்தக் குறையுமில்லாம மனுஷனைப் படைச்சிட்டா கர்வம் அதிகமாயிடுமெண்டு தான் ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு குறையா வகுத்து வச்சிருக்கான். காலையில இருந்த நான் வேற, இப்ப இடுக்குற நான் வேற, நாளைக்கு இருக்கப் போகிற நான், எப்பிடி எண்டு புரியேல்லை! இந்த லெட்சணத்தில நானும் சந்தோஷமா இல்லாம, உன்னையும் சந்தோஷப்படுத்தாம எவ்வளவு முட்டாள் தனமான வாழ்க்கையா வாழ்ந்து கொண்டிருக்கிறன் எண்டுறது புரியுது..''.

பேசிக் கொண்டிருக்கும் போதே சிவசுவின் கண்கள் கலங்க ஆரம்பித்தன. ஆண் அழமாட்டான் என்று யார் சொன்னது..? அழுவான். தன் தவறுகளை உணரத் தலைப்படும்போது குழந்தையாக கேவிக் கேவி அழுவான். என் சிவசு அப்படித்தான் அழுதான்.

**எழுதியவர்**
**வல்வெட்டித்துறை**
**பா.பாலேந்திரன்.**



தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் கேட்கும்

காலக்கண்ணாடி காட்டிய கோரமுகமே தாயகத்தின் கொடு ரப்போர். அது தந்த வாழ்வே சிதறிப்போன எம்மினம் கறுப் பர் என்ற பெயருடன் பனை மரங்களின் கீழ் புலம்பெயர்ந்த வாழ்வு. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ் பவர்களும், போரைக் காரணம் காட்டி தப்பிக் கொள்பவர் களும், வெள்ளையர்கள் ஒதுக்கு வதால் தம் அடையாளங்களைத் தேட முயல்பவர்களும் இப்படிப் பல தமிழர்கள். இந்த அடை யாளத் தேடல்கள் தேசியவாதம், ஊர்வாதம், சமயம் என விழுமி யங்களாய் விழுது விட்டிருக் கிறது. இவர்களுக்குள் சில அரை யும் குறையுமான சங்கீதக் கலை ஞர்கள். ஆலை இல்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரை போல் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

போத்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என பல வெள் ளையர்கள் எம்நாட்டுக்கு வந்து கோவில்களை இடித்து தேவால யங்கள் கட்டினார்கள். எம்மை அடித்து வைத்துக் கோட்டை கட்டினார்கள். ஆனால் இங்கோ சிறு குடில் கட்டிக் கும்பிட அனுமதி மறுக்கப்படு கிறது. இருப்பினும் சிரமங்களின் மத்தியில் சிவராத்திரி விழா ஒழுங்கு செய்யப்பட்டது. பல புதிய தமிழ் புதுமுகங்களையும், தமிழர் சிலர் திருமணம் செய்து போட்டு வைத்துச் சேலை கட்டிய ஆபிரிக்க நோர்வே, பாக்கிஸ்தானியப் பெண்களை யும் பார்க்கக்கூடியதாக இருந் தது. ஆண்கள் ஒருபுறமும் பெண் கள் மறு புறமும் தம்பதிகள் இரு புறமும் இருந்தமை விழுமியங் கள் விலகாது வந்தமை தெரிந் தது. மூன்றாம் சாமப்பூசை முடிந்து சங்கீதக்கச்சேரி ஆரம்பமானது. மிருதங்கம் தன்னைத்தட்டி தயார் என்றது ஒலி பெருக்கியும் பொறாமை யில் உறுமிக் கொண்டது.

சரிசெய்ய முந்தானை சரிந்து விழ, குயில் போன்றோர் குமரி நிலம் பார்த்து நடந்து வந்தாள். சபை திரும்பி இவளா? என்றது. ஆண்டவனை எண்ணாது ஆண வத்துடன் முதுகு காட்டி அமர் ந்து ஒலிவாங்கி முன் தன் குயில் குரலைச் சரிசெய்தபோது தான் புரிந்தது. அது காகக் குரல் என்று. கச்சேரி ஆரம்பமானது. தெலுங்குக் கீர்த்தனைகள் அள்ளி வீசப்பட்டன. பின்னணி இசை முன்னனிக்கு வந்ததால் குரல் கட்டம் தாண்டியது. பாடல் பக்க வாத்தியத்துக்காக? அல்லது பக்க வாத்தியம் பாடலு க்கா? என சங்கீதம் தெரிந்தவர் கள் சலித்துக் கொண்டனர். ஆனால் அதையே சிலர் விழுந்து விழுந்து இரசித்தனர். இது போதும் பாடகிக்குப் பவுசு உயர்ந்து கொள்ள. சபை வாசல் பக்கம் திரும்பியது. ஓர்முதிர்ந்த கிழவன் பொட்டும் பிறையுமாக உள்ளே நுழைகின்றான். புது உடை போட்டிருப்பினும் ஒரு கந்தல் தோளிலே துவண்டு கொண்டிருந்தது. வாயில் வந்த படி தமிழ் கவியும் பழ மொழி யும் பகர்ந்து கொண்டிருப்பான். விளங்கியவர்கள் அவனை மதித்தார்கள். விளங்காதவர்கள் விசரன் என்றார்கள். சூரிய னைப் பார்த்துச் சொட்டை சொல்லும் சேவல் என கிழவன் சிரித்துக் கொள்வான். மூலை யில் போய் அமர்ந்து கொண்ட வன் காற்றோடு கதைத்தான். சங்கீதத்துடன் சிரித்தான். சுவ ரெங்கும் சங்கீதம் முட்டி மோதிக் கொண்டது. அச்சத்தி னுள்ளும் சிலர் குறட்டை விட்டுத் தூங்கினர். பாடல் ஒன்று முடியும் போது கிழவன் கவியொன்றைக் காற்றில் விட் டான்.

அரையும் குறையும் அரங்கேறி னால்<br>
நிறைந்தவரெல்லாம் நித்திரை கொள்வார்<br>
குறட்டை கூடக் கூறிவிடும். அவன் நித்திரை என்று<br>
குறைப்படிப்புத் தெலுங்குக் கீர்த்தனை _ஐயகோ<br>
என்ன சொல்லும் தமிழனுக்கு!

விளங்கிக் கொண்டவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். விளங்காதவர்கள் அருகில் விசா ரித்துக் கொண்டார்கள். பாடகி க்கு கோபம் கொதித்துக் கொண்டு வந்தது. ஒலிவாங்கி முன் நெருங்கி வந்து கிழிந்த கந்தல்கிழம் ஏன்குளறுகிறது? சங்கீதம் என்றால் என்னவென்று தெரியுமா? அது பூச்சியம், சைவர் என தன் தலையைக் காட்டி கத்தினான். கிழவன் சிரித்தபடி கூறினான்.

நான் வைசன்தான் சிவனை வணங்குவதால்<br>
மரக்கறி உண்பதால் அல்ல<br>
கந்தலுள்ளும் கருத்திருக்கிறது தாயே<br>
நீ பாடு. உனக்காகவே பாடுகி றாய்<br>
ஊருக்கு உதவாப்பட்டு செவிடன் காதுச்சங்கே.

அவன் பாடினான். மிருதங்க அடிக்காவே பாடினான். பாட லில் உயிர் இல்லை. அதையே தாளம் போட்டு ரசித்துக் கொண்டிருந்தது ஓர் வாலிபர் கூட்டம். தாம் சங்கீதம் புரிந்த புருசர்கள் எனக்காட்டிக் கொள் வதில் ஓர் பூரிப்பு. இதனால் பாடகிக்குப் பரபரப்பு. முந் தானை விலகியது கூடத் தெரி யாமல் பாடினாள். அரைகுறை ஆடைகளால் அங்கம் காட்டும் அழகி சமயச் சடங்குகளுக்கே சாறி கட்டுவாள். முந்தானை விலகியிருப்பது அவளின் வழக்கம். அது பழகிப் போன தொன்று. இது போதும் காளை யர்கள் கச்சேரியில் கலப்பதற்கு. கிழவனின் குரல் மீண்டும்.

சாரீரமும் சங்கீதமும்,<br>
சட்டைக்குள்ளா சரஸ்வதியே<br>
தமிழ் தெரியாத சிவனுக்கு சமஸ்கிருதத்தில் பூசையோ?<br>
தெலுங்கிலே கீர்த்தனையோ?<br>
தமிழ்த் தெய்வம் முருகனுக்கும் இதுதான் விதியோ?<br>
தமிழ்த் தெரியா தெய்வங்களு டன் தமிழனுக்கு இப்படியோர் தொடர்பா?<br>
எனக்கா தமிழ்த் தெரியாது? இது கேள் கிழவா! என்றவள்

ஊர்வசி ஊர்வசி என்ற சினிமாப் பாடலைப் பாடத் தொடங்கினாள். சபை களை கட்டியது. கை தட்டல், தலை யாட்டல், கண்ணடித்தல் என இளசுகள் துள்ளின. பாடகி கிழவனை ஏளனமாகப் பார்த் தாள். கிழவனோ ஏக்காளமாகச் சிரித்தான்.

ஊர்வசி, இரம்பைக்கெல்லாம்<br>
ஆங்கிலம் மட்டும்தான் புரியு மோ<br>
கறிக்குள் சில கடுகுகள் போல்<br>
தமிழ் ஏடுகளில் தமிழ்ச் சொற்கள்.<br>
பாடல்களிலும் அதுதானே?

பாடகிக்கு என்னசெய்வ தென்று தெரியவில்லை. கிழவன் மீண்டும் சிரித்துக்கொண்டு எழுந்து செல்ல முயன்ற போது மறுபக்கத்தில் கணவனுடன் கூடி இருந்த நோர்வேயியப் பெண் இனிமையான குரலில் ஆடிக் கொண்டானந்த வேடிக்கை காணக்கண் என்ற சங்கீதத் தமிழ்ப் பாட்டைப் பாடத் தொடங்கினாள். கிழவன்

மீண்டும் அமர்ந்து கொண்டான். பாடகி ஒலிவாங்கியைப் பிடுங்கி எடுத்தாள். உனக்குத் தமிழ் தெரியுமா? நீ இந்துவா? சாறி காட்டிப் பொட்டு வைத்தால் போல் இந்துவாக முடியாது. நீ பிறப்பால் இந்துவா_ குளறி னாள்.

சேலையை ஒதுக்கி எழுந்து நின்று சபையைப் பார்த்து நோர்வேயிய மொழியில் சொன் னாள், எனக்கு தமிழ் கொஞ்சம் விளங்கும். எழுத, வாசிக்க முடி யும். பிறக்கும் போது மனிதன் கலை, கலாச்சாரம், சமயம் எதையுமே கொண்டு வந்ததில் லை. ஆகவே பிறப்பால் மட்டும் யாரும் இந்துவாக முடியாது. மாட்டு இறைச்சி காச்சி பசுப் பால் விட்டு இறக்குபவர்கள் இந்து என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது. அந்தப் பெரியவர் தமிழில் கேட்ட கேள்வியையே புரிந்து கொள்ள முடியாதவர் எப்படி தமிழர் என்று கூற முடியும். மொழியைக் கொண்டு தானே இனங்கள் இருக்கின்றன எனக்கூறிவிட்டு அமர்ந்து கொண்டாள். பாடகி முறுக்கேற் றிய பொம்மை போல் துள்ளத் தொடங்கினாள். பக்கவாத்தியக் காரர்கள் அவளை அடக்கினர்.

கிழவன் மீண்டும் எழுந்தான். ஆண்டவா! தமிழர் அழிந்தா லும் தமிழ் வாழும் போல் தெரிகிறது என்றபடி சால்வை உதறிக் கொண்டு ஆபரணங் களால் அலங்கரிக்கப்பட்ட சிவன் முன் சென்று உரத்த குரலில்

தெய்வமே! உனக்குத் தமிழ் தெரியும்
பிறமொழிகளால் தடுக்கிறார் கள். இதோ கேள்!
சத்தில்லாப் பிள்ளைகள் சாலையிலே பிறக்கிறது
இலங்கையில் இவ்வினம் உயிரைக்கையில் கொண்டு
ஊர்வலம் போவது தெரிய வில்லையா?
அகதிகள் அங்கே
அன்னதானம் இங்கேயா?
அனைத்தும் இழந்த மக்கள் அங்கே
அடை, அணிகலன் நகை, நட்டுடன்
ஆண்டவா! நீ இங்கேயா?
கொடுக்க வேண்டியவன் நீ
உனக்கெதற்கு பொன்னும், பொருளும்
பாலும் தேனும்
இப்பூக்கள் மட்டும் உனக்குப் போதும்

என பக்கத்தில் கிடந்த பூக்களை எடுத்து சிவனுக்கு எறிந்துவிட்டு சால்வையை தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான் கிழவன் புதிய பாதையில். புரிந்து கொண்டவர் கள் எழுந்து நின்றனர். அவன் சென்ற சுவடுகளின் மேல் பாதம் வைத்து நடந்தனர். பாடகியோ சரிந்த சேலையை இன்னும் சரிசெய்யாமலே இருந்தாள். கதிவரனும் கண் விழித்தான். குறட்டை விட்டுத்தூங்கியவர் களும் விழித்துக் கொண்டவர் கள். சிலர் தெரிந்தோ தெரி யாமலோ அவன் பாதம் பட்டு நடந்தனர். இன்று அவர்கள் போகும் பாதையில் போலிப் பூசாரிகள் கிடையாது. பெண் கள் பூசை செய்கிறார்கள். இந்தத் தெய்வங்களுக்குத் தமிழ் விளங்குகிறது. இவர்களின் புனிதமான புரட்சிப் பயணத் திற்கு குயில்களே கானம் இசைக் கிறது. காகங்கள் கத்துவது மில்லை. கரைவதுமில்லை. அப்பாதை அன்பு நிறைந்த ஆனந்த வழியாவே இருக்கிறது.

(இது ஓர் குறியீட்டுச் சிறு கதை. வாசகர்களின் நோக்கில் பல வடிவைப் பெற்றுக்கொள் ளும். ஆனால் கதை, சம்பவங் கள் யாவும் கதாசிரியரின் கற்பனையே) - நக்கீரனார்

அன்புடன்

நக்கீரனார்.

## சர்வதேசதமிழர் கவியரங்கு

**பார்க்காமல் போகின்றாயே..**

பால் போன்ற உன் முகத்தை
நாள் தோறும் காண இங்கே
பார் முழுதும் தேடுகின்றேன்
பார்க்காமல் நீ போகின்றாயே

எழில் கொஞ்சும் உன் முகத்தை
எழுதி டாத கவிஞ னில்லை_ அதனால்
பார் முழுதும் தேடுகின்றேன்
பார்க்கா மல் நீ போகின் றாயே

காத லரும் உன்னைத் தானே
தூது போக கேட்கின்றார்கள்
கொஞ்சும் இளம் பிஞ்சுகளும்
கெஞ்சிடுவார் பாடு என்றே

களங்க மற்ற உள்ளங்களின்
காதலுக்கும் நீயே சாட்சி_ உன்னை
பார் முழுதும் தேடுகின்றேன்
பார்க்காமல் நீ போகின்றாயே

இருள் சூழ்ந்த உலகம் போல
இதயம் கொண்ட மனிதருள்ளே
ஏங்கி நின்றேன் உன்னைக் காண
ஏன் என்னை வெறுத்து விட்டாய்

ஒளி வீசும் உன்முனம் காண
ஓடி வந்து நானும் நின்றேன்
கருங் கூட்ட முகிலினுள்ளே
மறைகின்றாயே நிலரி பெண்ணே.

(ஆக்கம் பொன்.சிவா)

## புலப் பெயர்ச்சி

கோபுரம் பார்த்தே
தெரிஞ்சுப் போச்சு -
இந்த ஊரில் தான்
நான்
உலகம் கண்டது.

வானத்தைத்
தொட்டு விட எண்ணி
நானாடிய
பள்ளிக்கூட
மாமரத்து ஊஞ்சல்

நான்
மண்டையுடைந்து காயப்படுத்திய
நச்செள்ளை

ஐந்து வயதில்
நானற்றிந்த அறிவியல்
டுரியானறுத்து
மண்ணுக்குள் வைச்சா பழுத்திடும்

அலுவலகப் பையன்
பள்ளிக் கடிதங்கள்
வந்து சேர்க்கும் பொழுது
பத்தரை மணி ஓசையெழுப்பும்
“ பட்டினி நீயென”

பெரிய லாரியில்
ஓசையெழுப்பி கையசைத்துச் செல்லும்
கரிகாலன் -
சோவை என்ற பட்டப் பெயருடன்
எப்பொழுதும்
வெயிலில் காய்ந்து நிற்பவன் !

கண்ணில்
ஏகப்பட்ட வினாக்குறிகளோடு
என்னைப் பார்க்கும்
50 ஆண்டு அனுபவப் பெரிசுகளோ

ஆங்காங்கே
திட்டுத் திட்டாய்த்
திவலை நீர்கள் தேங்கி நிற்பது
இந்த
மன்சாலையில் மட்டுமல்ல
என் மனசிலும் தான் !

கு.வேலுசாமி
பகாவ் இடைநிலைப் பள்ளி
பகாவ், நெ.செம்பிலான்.



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***தமிழா தலைநிமிர்ந்து நில்லடா***

தமிழா ! தமிழா !
மற்ற இனங்களுக்கு கைகட்டி
சேவை செய்தது போதுமடா !
தமிழ் இனத்தை முன்னேற்ற
எழுந்து வாடா தமிழா

அடிமை வாழ்ந்தது போதும்
சுதந்திரமாய் வாழ ஒற்றுமை
சேர துணிந்து வாடா தமிழா !

வேறு நாட்டில் பணி செய்தாலும்
தாய்மொழி தமிழை மறக்காமல்
தமிழ் செழித்து வளர மொழி
தொண்டு செய்யடா தமிழா !

இந்து, கிறிஸ்து, இஸ்லாம்
என்ற மத பிரிவுக்கு விடுதலை
கொடுத்து தமிழ் என்ற மொழி
உணர்வோடு வாழ்ந்திடு தமிழா !

உலகு எங்கும் வாழும் தமிழராயினும்
நமது தமிழ் புத்தாண்டு கொண்டாடி
பண்டிகியில் அனைவரும்
ஒன்ற சேர்ந்து மகிழ்வோடு
அன்போடு வாழடா தமிழா
(ஜோ.ஜகந்நாத தேவர் திருச்சி)

**இயற்கையும் வாழ்க்கையும்**

காட்டு விலங்குகட்குக் காடுலகம்
கண்ட நினைத்த இடம் போய்வருமே
கூட்டங் கூட்டமாய் வாழ்ந்தாலும்
கும்பிட்டு வாழும் பழக்கமில்லை
தேட்டம் தேடிப் பதுக்குவதும்
தடை முகாங்களும் அங்கில்லை
வாட்டி வதைக்கும் நோயில்லை
விடியுமட்டும் வேலையில்லை

நீரில் வாழும் மீன்களுக்கெல்லாம்
நேசத்துலகம் நீர் நிலைதான்
பாரில் வாழும் மாந்தரைப் போல்
பொறாமை பெருமை அங்கில்லை
ஊரில் பெரியார் சிறியரென்போம்
உயர்வோ தாழ்வோ அங்கில்லை
ஏரில்லாத வாழ்க்கை யங்கே
எதிலும் இன்ப சுகமங்கே

வானப் பறவைகள் அத்தனைக்கும்
விண்வெளியெங்கும் விருப்பிடமே
மானத்தோடு போயெங்கும்
மாலை வருமே மகிழ்வோடு
ஏனமெல்லாம் இவ்வுலகே
ஏற்ற உடைகள் இறக்கைகளே
தானங் கொடுப்பது தரணியன்றோ
தங்கும் வீடுகள் விருட்சங்களே.

கடவுள் தந்த செல்வமெல்லாம்
கட்டி யாழப் புறப்பட்டு
இடரில் விழுந்தது மனுக்குலமே
இயற்கையை பதிப்பதும் மாந்தர்களே
கடவுச் சிட்டு முறை போன்று
கட்டுப் பாடுகள் தமக்காற்றி
மடமைத் தனத்தில் அழிவதெல்லாம்
மனுக்குலத்துச் சீவன்களே
(செ.நாகேந்திரன்)

***அவர்தான் பெரியார்***

மனக்குகையில் சிறுத்தை ஏறும்
மனத்திற்குள் கொள்கை ஏறும்
பகுத்தறிவு பெட்டகம் பெரியார்
பாரினில் அவருக்கு நிகர் யார் ?
தமிழினத்தின் வளர்ச்சிக்கு தனது
தள்ளாத வயதிலும் குரல் கொடுத்தது
தமிழினத்திற்கு தீங்கு புரிந்திட
நினைப்பவரை தீஞ்சொல்லால் விரட்டியவர்
இறுதி மூச்சுவரை தமிழருக்காக
இளைஞரைப் போல உழைத்தவர்.
மூளைக்கு போட்டு இருந்த
விலங்கை அடித்து நொறுக்கியவர்.
பக்தி என்பது தனி சொத்து
ஒழுக்கம் என்பது பொது சொத்து
பெரியார் பிறக்கவில்லை என்றால்
தமிழன் சிறக்கவில்லை என்று பொருள்.
(இரா.இரவி மதுரை)

**எனக்கென்று ஒரு நாடு**

முருகா திரு
முருகா

மொழி, இனம், நாடு
பண்பாடுகள் வேறு வேறாய்
இருப்பவனோடு சேர்ந்து வாழு
அதுவே ஒருமைப்பாடு என்கின்றனர்.

உரிமை தர மறுப்பவனிடம்
அடிமையாக இருக்கலாமே தவிர
மாந்தனாய் வாழ முடியாது.
மாந்தனாய் வாழ
உரிமையைப் பெறாமல்
இருக்க முடியாது.

ஈழம் தமிழ்
ஈழம்
மாங்கனிக்காக மட்டுமல்ல
உரிமையைக் காக்கவும், மீட்கவும்
தனிநாடு அமைத்துக் கொண்டவனே

இங்கிருக்கும் சிலதுகள்
ஈழம் சிறியது
மக்கள் தொகை குறைவு என்கிறது
குறை மதியுடையதால்

அதுகளுக்குத் தெரியாது
விடுதலை என்பது
சிறிய, பெரிய நிலம் என்பதில்
இல்லை என்று
ஏனெனில் ?
அதுகளுக்கு உயிரொன்றே வாழ்வு
மூளையைப் பட்டினி போடும்
முட்டாள்கள் அது.

"தமிழன் கறி இங்கு கிடைக்கும்"
பலகை மாட்டப்பட்டு விட்டன
நம்தாய், தங்கைகளின்
புறநானூற்று மார்பகங்கள்
அறுக்கப்பட்டு தோரணங்களாக
தொடங்க விடப்பட்டு விட்டன.
ஸ்ரீ கழுத்தை, தொடைகளிலும்
குறிகளிலும் எழுதியாகி விட்டன
இவர்களோடு..
இப்படிப் பட்டவர்களோடு
சேர்ந்து வாழச் சொல்லுகின்ற
மாந்த நேயமற்ற
விலங்குகளிடமிருந்து

www.tamilarangam.net

விலகுவதே விடுதலை
முருகா _ திரு
முருகா...
முதன் முதலில் தனிநாடு
அமைத்துக் கொண்டவனே
ஈழம் மட்டுமல்ல
ஒவ்வொரு தேசிய இனமும்
தன்னைத்தானே ஆண்டு கொண்டு
மற்றைய தேசிய இனங்களோடு
கைக் குலுக்கிக் கொள்வதில்
நமக்கொன்றும் தலையில்லை.
என்மினக் குருதியில்
கை நனைத்தவனோடு
கைக் குலுக்கிக் கொள்வதினி முடியாது

யாருக்கும் அடிபணிந்து
வாழவும் மாட்டோம்
யாரையும் அடக்கியிங்கு
ஆளவும் மாட்டோம்.

எனவே.. விடுதலைக்காக
எதையும் இழக்கத் துணிந்து விட்டோம்
எதற்காகவும்
விடுதலையை இழக்க ஒப்ப மாட்டோம்
ஏனெனில்..? மாந்தர் நாம்.

— புதுவை தமிழ் நெஞ்சன்

**ஒளி படைத்த கண்**

புலன்களின் உரிமை தாங்கி
தலன்களின் இனிமை வாங்கி
கலங்கிடும் துன்பம் பொங்கி
இலங்கிடும் இன்பம் ஓங்கி

மருத்துவர் உற்று நோக்கி
உருத்துவார் இமையை நீக்கி
கருத்துமே காண்பார் தேக்கி
திருத்துவர் திசையில் தாக்கி

நெஞ்சத்து உணர்வு கூட்டி
வஞ்சத்தில் வாஞ்சை ஓட்டி
மஞ்சத்தில் பெருமை பூட்டி
தஞ்சத்தில் தயவு மூட்டும்

மீனினம் ஒத்தே கமழும்
மானினம் வடிவாய் மகிழும்
பூவினம் மரபாய் ஓங்கும்
தேனினம் உருவாய்த் திகழும்

ஒளியின்றி படைத்திடப் பயனேது
ஒளிவின்றிக் கூறிடப் யமேது
ஒளியின்றி ஏற்றிடக் குணமேது
ஒளிவின்றிக் கூறிடும் உணர்வேதான்.

(என்.ஆர்.இலட்சுமணன்
தலைமை ஆசிரியர்: ஓய்வு கைதராபாத்)

**என்னவள் ஒரு ஊமைக்குயில்**

என் காதல் கீதங்களுக்கு
இனிமை அதிகமென்றேன்..
இதயத்து உதடு களசைத்து
நெகிழ்ந்து மல்கும் மௌனக் குரலின் !..
அபூர்வ இராகங்களிலே
அழகாய் நான் சொல்லா(த) உணர்வுகளை.
அதிகாரப் பூர்வ நிலையிலே !..
நான் சொல்ல ஆரம்பித்த நல் வேளையிலே
சூழலில் செவிட்டு மனங்கள்
சுற்றி நிற்கக் கண்டு
என்னவள் உணர்வில் ஒரு ஊமைக்
குயிலாகி விட்டாள்...

(சு.இலக்குமணசுவாமி)

**வெறி**

தாய்க்கு தன் மகன் மேல்
பாச ஒரு வெறி
தங்கைக்கு தன் தனையன் மேல்
அன்பு ஒரு வெறி
தாரத்துக்கு தன் கணவன் மேல்
இன்ப வெறி
இன்றைய அரசியல் கட்சிகளுக்கு
ரௌடிகளின் மேல் வெறி
ரௌடிகளுக்கு மந்திரி பதவி
மேல் வெறி
பதவி பணம் படைத்தவர்களுக்கு ஏழைகளை
ஏமாற்றுவதே வெறி
பதவிக்கு வருபவர்களுக்கு மக்களை
ஏமாற்றுவதே வெறி
ஒவ்வொரு மொழியினரும்
அடுத்த மொழியினரை தாக்குவது வெறி
ஆபிரிக்காவில் கறுப்பனை அடக்கியது
வெள்ளையர் நிறவெறி
சிங்களவர் தமிழரைதாக்குவது
இனவெறி
சந்திரிகா இதற்கு ஒத்துழைப்பது
தன் பதவி வெறி
தமிழ் இளைஞர்கள் போராடுவது
தமிழ் ஈழம் சுதந்திர வெறி

(ஜான். ராஜ்தேவர்)

**இடம் பெயர்வு**

மாரி பெய்யும் என்றால்
மூட்டை முடிச்சுகளுடன்
முட்டைகளையும் கொண்டு
இடம் பெயரும் எறும்புகள் போல்
குண்டு மாரி பெய்யும் என்று
இடம் பெயர்ந்தனர் யாழ் மக்கள்.

மாரி முடிந்த பின்பு பொந்தை நோக்கித்
திரும்பி வரும் எறும்புகள்.
யாழ் மக்கள் திரும்புவது விரும்பியல்ல.
சொந்த இடத்தில் இருந்து சாதிப்போம்
அன்றேல்சாவோம் என்றே.

சித்தெறும்புக்களுடன் கடியெறும்புக்களும்,
கட்டெறும்புக்களும் வந்துவிடும் என்று
புத்துக்கள் வாயினிலே பிணந்தின்னிப்
பச்சை ஓநாய்களுடன்
கறையான்களும் காவல் நிற்கின்றன.
தன்னினத்தைக் கடித்துக் கொன்று
தானும் சாகநிற்கிறது
இக்கறையான்கள்.
யாழ்மக்கள் ஓநாய்களைக் கண்டு
கைதட்டி, மணியடிப்பது அன்பிலல்ல
ஆபத்து வருகிறது என்றே !!
அம்மா என நாமலறும் குரல்
சந்திரிகாவுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும்
அம்மே என அன்பாகவே கேட்கிறது ?
தமிழனினதும், மனிதத்தினதும்
சாக்குரலைக் கூட
கேட்கச் சக்தியற்றது தானே
வெறி கொண்ட பௌத்த,
சிங்களப் பேரினவாதம்

— தி. திலீபன்

www.tamilarangam.net

## அமரர் திரு.க.சபா ஆனந்தர் B.A.(London), B.O.L (Madras)

### அவர்களின் வாழ்க்கை வரலாறு

கலைகளும் கல்வியும், விவசாயமும், தெய்வபக்தியும் மிகுந்து விளங்கும் யாழ்ப்பாணம் வலிகாமத்தைச் சேர்ந்த இணுவையம்பதியில் வேளாள மரபில் தோன்றிய திரு.கதிர்காமர் சபாபதி என்பவருக்கும், அதே ஊரைச் சேர்ந்த பொன்னாச்சி என்பவருக்கும் கனிஷ்ட புத்திரனாக 1.10.1910 அன்று திரு.ஆனந்தர் பிறந்தார்.

திரு.திருமதி கதிர்காமர் - சபாபதி தம்பதிகள் செய்த தவப்பயனாக திரு.ஆனந்தருக்கு மூத்த சகோதரர்களாக திருவாளர்கள் முத்தையா, கதிரித்தம்பி, இளையதம்பி ஆகியோர் பிறந்தனர்.

திரு. ஆனந்தர் தமது சிறுபராயத்தில் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் அதைத் தொடர்ந்து யாழ்.இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று விசேட சித்திகளுடன் சித்தியெய்தினார். கல்வியில் மாத்திரமன்றி ஆனந்தர் பேச்சுப் போட்டிகள், விவாத அரங்குகள் முதலியனவற்றிலும் முதலிடம் பெற்று அதிபர், ஆசிரியர்கள் அனைவரதும் அன்பிற்கும் பாராட்டுக்கும் ஆளானார். இவை அனைத்தும் ஆனந்தரை ஆசிரியத் தொழிலில் ஆர்வம் கொள்ளச் செய்தது என்றால் அது மிகையாகாது.

கல்வி, கலைகளில் மாத்திரமன்றி ஆனந்தர் விளையாட்டுப் போட்டிகளிலும் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். குறிப்பாக கரப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கினார். பிற்காலத்தில் யாழ் மாவட்ட கரப்பந்தாட்டக் குழு அங்கத்தவராக இருந்து பல்வேறு அணிகளுடன் விளையாடி யாழ்.மாவட்ட அணியின் வெற்றிக்கு அடிகோலினார்.

தனது ஒன்பதாவது வயதில் அருமைத் தந்தையாரை இழந்த ஆனந்தர் ஏழ்மையிலும் கல்வியே செல்வம் என்ற எண்ணத்துடன் கல்வி பயின்றார். அன்னாரின் கல்வி முயற்சிக்குக் கணவனை இழந்த அவரது அன்னையாரும் அருமைச் சகோதரர்களும் பெரும் உதவி புரிந்தார்கள். சிறுவன் ஆனந்தரும் அன்னையாருக்கும், சகோதரர்களுக்கும் விவசாயத்தில் தம்மாலியன்ற உதவிகள் புரிந்தும் தமது கல்வியில் கருந்தனமாக இருந்தார்.

இவ்வாறு கல்வி, கலைகளில் சிறப்புற்று விளங்கிய ஆனந்தா ஆசிரியத் தொழிலால் கவரப்பட்டு, செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது 'சைவப்புலவர்', 'பண்டிதர்' ஆகிய பட்டங்களைப் பெற்று, சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு உபஅதிபரானார்.

இக்கால கட்டத்தில் இணுவில் தெற்கைச் சேர்ந்த, பழம்பெரும் புகழ் பெற்ற விவசாயியான திரு. செல்லையா - ஆனந்தி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியான அன்னம்மாவைத் திருமணம் செய்து கொண்டார்.

திரு.ஆனந்தர் அவர்கள் தமது துணைவியாருடனும் தாயாருடனும் இந்தியா சென்று B.O.L (Madras) ஐயும் முடித்து, B.A.(London) இலும் சிறப்புச் சித்திபெற்றார். திருமணமாகிக் குழந்தைகள் பெற்ற பிறகும் கூடக் கல்வியில் பற்பல பட்டங்கள் பெற்றது அன்னாரின் பெருமையை உலகிற்குப் பகரும். தமிழ்நாட்டில் தங்கியிருந்தபோது பிரபலமான அனைத்து தலங்களையும் தரிசித்தார்.

அன்னாருக்கு ஐந்து புத்திரர்களும், இரு புத்திரிகளும் பிறந்தனர். திரு. ஆனந்தர் தம் மக்கள் அனைவருக்கும் நன்கு கல்வியூட்டினார்.

நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரி அதிபராகக் கடமையேற்ற பிறகு, அன்னார் மலையகத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. கதிரேசன் கல்லூரி தனியார் நிறுவனமாகத் திகழ்ந்த காலத்தில், முகாமையாளர் சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் எங்கெங்கு நல்ல ஆசான்கள் இருந்தார்களோ, அவர்களைத் தேடிப்பிடித்து, கதிரேசன் கல்லூரிக்கு அழைத்து வந்து, அக் கல்லூரியை ஆலமரமாக்கினார்.

தமிழ்நாட்டுப் பிரபல இசைமேதை திருமதி எம்.எல்.வசந்தகுமாரியை அழைத்து வந்து, கொழும்பிலும், நாவலப்பிட்டியிலும் கச்சேரிகள் நடாத்தி, பணம் வசூலித்துப் பலமாடிக் கட்டடங்கள் கட்டிக் கதிரேசன் கல்லூரியை, மலையகத்தின் மாண்புமிகு கல்லூரியாக மாற்றியமைத்தவர் இவர்தான். மலையக பிரபல அதிபர்கள், ஆசிரியர்கள் மறைந்த 'ஆத்மஜோதி' நா.முத்தையா, அவரின் சகோதரர் நா.அருமைநாயகம், திரு.தி.வே.மாரிமுத்து, திரு.ராஜகோபால், திரு.எஸ்.ஜோசப், திரு.எஸ்.குமார், திரு. கா.லோக சுந்தரம்(B.A., L.L.B.) திரு. ஆறுமுகம், திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு.எஸ்.ராஜு, திரு. V.T.தர்மலிங்கம், திரு.க.திருநாவுக்கரசு, திரு.காசிப்பிள்ளை போன்றவர்கள் திரு.ஆனந்தரின் காலகட்டத்தில் ஒளிவீசியவர்கள் எனினும், திரு.ஆனந்தரின் ஊக்குதலாலும், உற்சாகத்தாலும் சுடர்விட்டுப் பிரகாசித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் விளக்கு என்றாலும் தூண்டினால்தானே துலங்கும்?

நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியில் சேவை முடிந்தபின் இவரது சேவை புசல்லாவை சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்குத் தேவைப்பட்டது. ஏறத்தாழ இந்த 20 வருட காலகட்டத்தில், மலையகம் எங்கும் திரு.ஆனந்தரது தமிழ்/ சமய சொற்பொழிவுகள் நடக்காத இடங்களே இல்லையெனலாம். அன்னாரின் நாவன்மை அனைவரையும் கவர்ந்தது. அக்காலகட்டத்தில் மலையகத்தில் ஒரு கலையரங்கா, கவியரங்கா, விவாத அரங்கா, சமய சொற்பொழிவா அவ்விடத்தில ஆனந்தர் இருப்பார். அது சரித்திரம்!

தனது அதிபர் பதவியின் இறுதிக் காலத்தை நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்ய வேண்டி வந்தது. இணுவில் சிவகாமியம்மை பக்தனான அவர் நயினாதீவு நாகபூஷணி பக்தன் ஆனார். வடகிழக்கு மாகாணத்திலுள்ள சைவஸ்தலங்களில் இவரது காலடிபடாத இடமில்லை.

நயினாதீவு மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய போது கல்வி, கலைகளில் அன்னார் தீவுப்பகுதிகளில் குறுநில மன்னராக இருந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. இவையெல்லாவற்றையும் அன்னார் மறைந்த பின்னர், மலையகத்திலிருந்தும், தீவுப்பகுதிகளிலிருந்தும் வந்த அனுதாபச் செய்திகள் எடுத்தியம்பும். அன்னார் ஆற்றிய தமிழ்ச் சொற்பொழிவுகள், சமய உரைகள், விவாத உரைகள் இன்னமும் பலரின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.



நயினாதீவு மகாவித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், 'உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற வாக்கின்படி முழுநேர விவசாயியானார். தெய்வவழிபாடுகள் தொடர்ந்தன. எங்கெங்கு திருவிழாக்களோ அங்கெல்லாம் நிற்பார். பிரதட்சணைகளும் செய்வார். தேகாரோக்கியமாய் இருந்தபோது வருடந்தோறும் கதிர்காமக் கந்தனின திருவிழாவுக்குச் செல்வார். இணுவில் சிவகாமியம்மன் அன்னதானசபையின் முக்கிய அங்கத்தவராகத தொண்டாற்றினார். இணுவிலில் ஏற்பட்ட சில வம்புவழக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வைத்தார். இலவசமாகத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் கற்பித்தார். ஊரில் நடக்கும் அனைத்து சுக, துக்க விழாக்களிலும் அன்னாரைக் காணலாம். அன்னாரால் பயன்பெற்றோர் பற்பலர்!

திரு. ஆனந்தர் சிறுபராயத்தில் சற்று ஏழ்மையில் சிரமப்பட்டாலும் பிற்காலத்தில் கல்விச் செல்வத்தினாலோ, பொருட் செல்வத்தினாலோ அன்றி மழலைச் செல்வங்களாலோ, பேரக்குழந்தைச் செல்வங்களாலோ எவ்வித குறையுமின்றி வாழ்ந்தாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்

## காரையூரான்

கனவுகளாக்கும்போது இந்தக் கற்பனைகள் எல்லாம் எப்போது நிசமாவது? ஆயிரம் ஆயிரம் கேள்விகள் புற்றீசலாய் அவள் மனக்கதவைத் தட்டிக்கொண்டிருந்த வேளையில் அவர்களின் வீட்டுக் கதவையும் யாரோ தட்டிக் கொண்டிருந்தனர்.
அன்று வழக்கத்திற்கு மாறாக வேலைக்கு எழுகின்ற நேரத்தில் அனுவையும் எழுப்பினார்கள். கௌரியைத்தவிர மற்றைய அனைவரும் நித்திரைவிட்டு எழுந்திருந்தனர். ''மற்றைய் நாள்களில் அம்மாவும் அப்பாவும் எழுந்து ஒரு காலடிஓசைகூட மற்றவருக்கு கேட்டுத் தொந்தரவாய் இராது வேலைக்குச் செல்வார்களே இன்றேன் இப்படி அமர்களப் படுத்துகின்றனர்?'' அனுவின் மனதில் கேள்வி முளைவிட்டது. ''சியாமிழி ஏற்கனவே எழுந்து உதவி செய்துகொண்டிருந்தாள் .அப்படி இருந்தும் என்னையும் ஏன் எழுப்பினார்கள்?.''

அதிகாலையில் நித்திரைவிட்டெழுதல் போலக் கடினமான செய்கை வேறொன்றும் இல்லை. அனுவுக்கும் அதிகாலையில் எழுவதென்றால் கொலைக்களத்தைப் பார்ப்பதுபோலவே இருக்கும். எழுவதற்கு மனமில்லாது புரண்டு படுத்துக் கொண்டாள். கைகளை தொடைநடுவே வைத்து குடங்கிக் கொள்வதில் சுகமாய் இருந்தது . அந்த சுகத்தை அனுபவிக்கவிடாது அன்னம் வில்லியானாள். இது அனுவிற்கு சினத்தை உண்டு பண்ண,
-ஏனாம்மா எழுப்பிற இந்தநேரத்தில?
-முதல்ல எழும்பி முகத்த கழுவீட்டுவா.

அன்னத்தின் குரலிலும் முகத்திலும் சாந்தம் அளவுக்கதிகமாய்க் குடிகொண்டிருந்தது. எப்போதும் பரபரப்பாயும், அமைதியின்றியும் இருக்கும் அன்னத்தின் அளவுக்கதிகமான சாந்தம் அனுவுக்கு ஒருவித பயத்தை உண்டு பண்ணியது. என்ன நடக்கிறது என்பதைப் புரிந் கொள்ள முடியாமல் போய்விட்டாலும் சாப்பாட்டு வாசத்தை வைத்து காலைச்சாப்பாடு தயாராகி விட்டது என்பதை அறிந்து கொண்டாள். ஏன் இந்த அதிகாலையில் என்கின்ற கேள்விக்கு இன்னும் விடைகாண முடியவில்லை.

காலைக்கடனை முடித்துவிட்டு அறைக்குள் சென்ற அனுவிற்கு தற்போது அணிவதற்குத் தேவையான உடைகள் எடுத்துவைக்கப் பட்டிருந்தது. திறந்த அவளது அலுமாரி காலியாக இருந்தது. இது அவளுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அவளது பெட்டியைக்கூட அறைக்குள் காணவில்லை.

அனுவைப் படபடப்புத் தொற்றிக் கொள்ள வேகமாக கோலுக்குள் புகுந்தாள். அங்கே அனுவின் பெட்டியோடு அம்மாவின் பெட்டியும் எங்கேயோ போவதற்கு ஏதுவாய்த் தயார் நிலையில் இருந்தது. எதற்காக இந்தப் பெட்டிகள் இப்போது இந்தநிலையில் இருக்கின்றன? கேள்வி முளைவிட்டது. அன்னம் அடுக்களையில் இருந்து புறப்பட்டு வருவது தெரிந்தது. அன்னம் அருகில் வந்ததும்.

அம்மா?
என்ன அனு?
யார் எங்க போகினம்?
''அதுவா'' என அலட்சியம் செய்யப்போன அன்னம் பின்பு நின்று நிதானித்துவிட்டு,
நானும் , எனக்குத் துணையா நீயும் சிங்கப்பூர் போட்டு வரப்போறம்.
ஏன் சிங்கப்பூருக்கு? எனக்கேன் இவ்வளவு நாளும் சொல்லேல்ல?
என்னடி கேள்வி இது. அங்கபோன உடுப்புகள், நகையள், வீடியோகமறாக்கள் ,ஏகப்பட்ட சாமான் மலிவா வேண்டலாம் அதுதாண்டி.
அதுக்கு அக்காவ கூட்டிட்டு போறதுதானே?
அவளுக்கு பிளையிட்டில வந்தா சத்திவருமெண்டுதான் உனக்குத் தெரியுமே. அதோட அவளுக்கு இப்ப சுகமில்லையாமடி. அப்பாவுக்கும் மற்றவைக்கும் சமைச்சுக் குடுக்கவும் ஆள்வேணுமல்லோ. அதோட அவர் கட்டாயம் வேலைக்கு போனதான் செலவுகள் சமாளிக்கலாம்.
ஸ்கூல்ல பெமிசன் கேக்கேல்லேயே?
அது சியாமிழி செய்வாள்.

இவ்வளவு கதைத்தும் அனுவிற்கு சந்தேகம் தீரவில்லை. அம்மா சொல்வது போன்று நாம் சிங்கப்பூர் செல்கிறோமா ? அல்லது இலங்கைக்கு செல்கிறோமா ? சிலவேளை இந்தியாவுக்கு கூட்டிச் செல்லுகிறார்களோ ? கேள்விகள் தொடர்ந்தும் முளைத்துக் கொண்டிருந்தன.

ஸ்தீக்கிடம் சொல்லாமல் புறப்படவேண்டி வந்ததையிட்டு மிகவும் மனவருத்தமாய் இருந்தது. இப்போது கேட்டால் மாத்திரம் விட்டுவிடவா போகிறார்கள் என்கின்ற அவநம்பிக்கையால் பேசாது இருந்துவிட்டாள்.

வேந்தன் வண்டியை ஸ்ராட்செய்து கீற்றரைப் போட்டுவிட்டான். வண்டியின் கண்ணாடியில் இருந்த பனியைச் சுரண்டி அப்புறப்படுத்தினான். பின்பு வீட்டிற்குள் வந்து இரண்டு பெட்டிகளையும் எடுத்துச் சென்று வாகனத்தில் வைத்தான். மீண்டும் வீட்டிற்குள் வரும்போதும் அனு எதைப்பற்றியோ கடுமையாக சிந்தித்துக் கொண்டு இருந்தாள். அதைப்பார்த்த வேந்தனுக்கு'' இவளுக்கு என்ன யோசினை? ம்............அவனப்பற்றி இருக்கும். ம்..... இவள் திருந்தமாட்டாள்'' என எண்ணியவண்ணம் அனுவை உசுப்பினான்.
அனு?
என்னாப்பா?
போய் வண்டியில ஏறு.

மேலங்கியையும் பாதஅணிகளையும் அணிந்துகொண்டாள். மெதுவாகச் சென்று வண்டிக்குள் ஏறி இருந்தவளுக்கு வெப்பம் அதிகமாகத் தோன்றியது. வண்டியின் கண்ணாடியை கீழே பதித்துவிட்டு இருந்தாள். அப்போது அன்னமும் வேந்தனும் அடுக்களைக்குள் நிற்பதும் ஏதோ கதைப்பதும் அரசல் புரசலாக கேட்டது.

அனு காதைத் தீட்டிக் கொண்டாள். சமைத்து முடிந்ததும் சியாமிழி சாப்பாட்டு மணம்போக யன்னல் திறந்துவிட்டதை அசண்டை பண்ணாது கதைத்துக் கொண்டிருந்தனர். காதைத்தீட்டிய அனுவுக்கு சமையல் அறையில் கதைப்பது வாகனத்தை நிறுத்தியவுடன் நன்கு கேட்டது.

.............................................................................இருக்க் சொல்லிட்டன்.
அன்னம்! கவனமா இருக்கோணும். அவள் அங்கபோய் சேர்றவரைக்கும் அவள் எங்க போறாள் எண்டது அவளுக்கு தெரியக் கூடாது.

அனு இதைக்கேட்டதும் திடுக்கிட்டாள். ஓ நான் எண்ணியது போலவே என்னைச்சுற்றி ஏதோ சதி நடக்கிறது. அவளுக்கு கோபம் அதிகமாக உடல் நடுங்கத் தொடங்கியது. மெதுவாக தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். அவர்கள் மேற்கொண்டு என்ன கதைக்கிறார்கள் என்பதைக் கேட்க எண்ணினாள். வேந்தன் சாளரத்தைச் சாத்திவிட்டான். சாளரம் சாத்தப்பட்டதால் சத்தம் அந்த அறையுடன் சங்கமமாக அனு எதுவும் செய்யத் தோன்றதவளாய் சிறிது நேரம் அப்படியே வண்டிக்குள் இருந்தாள். அடுத்து என்ன செய்வது என எண்ண எண்ண ஆவேசம் ஆவேசமாய் வந்தது. இப்படியே இறங்கி எங்கேயாவது ஓடிவிடலாம் என்றால் எங்கே ஓடி எப்படி வாழ்வது என்கின்ற கேள்வி அவளைப் பயமுறுத்தியது. கோபமும் ஆத்திரமும் ஒன்றுசேர முகத்தில் இரத்தப் புரட்சி உருவாகியது. கைகள் மேலும் நடுக்கம் கண்டன. பத்திரகாளிபோல் கோபம் ஆட்சிசெய்ய விறுவிறுஎன இறங்கி வீட்டிற்குள் புகுந்து , சமையல் அறையை நோக்கிச் சென்றாள்.

வேந்தனும் அன்னமும் அனுவை இந்தநேரத்தில் எதிர்பார்க்கவில்லை. அனுவின் வரவு இருவரையும் அதிர்ச்சி அலைக்குள் தள்ளிவிட்டது. அதில் இருந்து முதலில் மீண்டு நிலமையைச் சமாளித்தவன் வேந்தனே .

என்னனு ? ஏன் இறங்கி வந்தா?
வேந்தன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அன்னம் புறப்பட அவசரப் படுத்தினாள்.
நான் வரல்ல.
இதென்ன கூத்து . (அன்னம் பரபரத்தாள்)
ஏன்வரல்ல?
நான் நீங்க ரீக்கற்ற காட்டினா மாத்திரம்தான் வருவன் . இல்லாட்டி வரமாட்டன். உங்க பிளான் எனக்கு விளங்கீட்டுது.
அனுவிற்கு அழுகையினுடே கோபம் கொப்பளித்தது.

இனி இவளைச் சமாதானம் செய்ய முடியாது என்பதை வேந்தன் புரிந்து கொண்டான். ஏதாவது கடுமையான தாக்குதல் கொடுத்து திகைக்க வைத்தால்தான் நாம் நினைத்ததை செய்ய முடியும் என முடிவுகட்டிக் கொண்டான். பின்பு அனுவை நெருங்கி அவளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோள்மூட்டை இறுகப் பற்றியவண்ணம்,
இந்தா அனு .உனக்கு ரிக்கற் காட்டினா விழங்கப் போறேல்ல . பேசாமவந்து வண்டியில ஏறு.
அனு திமிறினாள். அனு திமிறத் திமிற வேந்தனின் பிடி இறுகியது. அனுவால் திமிறமுடியாமல் போனபோது அழுகை வெடித்துக் கொண்டது. கண்கள் பனித்துக் கொள்ள நீர்த்திரையொன்று அவள் பார்வைக்கு குறுக்கே நின்றது. அழுகையும் கண்ணீருமாக,
என்ன விடுங்கப்பா.
என்ன இரஞ்சியும் அதைப் பொருள் படுத்தாதவனாய் வேுந்தன் அவளைத் தள்ளிக் கொண்டு வெளியே சென்றான். அனுபெரிதாய் திமிறியவண்ணம் கத்தினாள். பக்கத்தி வீட்டில் நாய் குலைக்க எதிர்வீட்டுக் கண்கள் என்ன எனக் கேள்வி கேட்டன. அனுவிற்கு வேட்கம் கோபம் எல்லாம் தலைகேற மீண்டும் உரக்கக் கத்தினாள். வேந்தன் திமிறவிடாது கருக்குள் தள்ளிக் கதவைச் சத்திவிட , அம்மா மற்றப் பக்கத்தால் உள்ளேஏறிப் பிடித்துக்கொண்டாள். அனுவின் மனது திட்டித் தீர்த்தது. "ராட்சசி என்ன பிடிபிடிக்கிறாள்." அம்மா பிடித்திருந்த இடம் வலித்த அதே நேரம் அவளது மனமும் வேதனையால் துவண்டது. அவள் செய்வதறியாது விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். வண்டி மெல்ல மெல்ல வேகம் பிடித்து கடலுக்கு கீழே நனையாது சுவாசித்தவண்ணம் ஆகாய விமான நிலையத்தை நோக்கிச் சென்றது. எப்படி இவர்களிடம் இருந்து தப்பிப்பது என்னும் கேள்விக்கு விடைகாண வேண்டியதால் சாதாரண வேகத்தைவிட ஆயிரம் மட.ங்கு வேகத்தில் அனுவின் மூளை வேலை செய்யத் தொடங்கியது.

இவர்களின் இந்த அடக்கு முறையை எப்படித் தகர்த்தெறிவது? விமான நிலையத்தில் விமானத்தில் ஏறாமல் அடம்பிடிக்கவா? அங்கே அடம்பிடித்தால் மட்டும் விட்டுவிடுவார்களா? அத்தனை இன்னாட்டவர் முன்பும் பிடுங்குப் படவேண்டும். கடைசியில் எப்படியாவது ஏற்றியே விடுவார்கள். இதனால் அவர்களுக்கு மாத்திரம் அல்ல எனக்கும் அவமானம் தானே? அப்படி யென்றால் எப்படி? ஏன் ஸ்தீக் உண்மையில் என்னை நேசித்திருந்தால் பதினெட்டு வயதுமுடியவும் அங்குவந்து என்னைத் திருமணம் செய்து கொண்டு வரலாமே? அது எந்தநாடாயிருந்தாலும் எவரும் தடுக்க முடியாதல்லவா? அதற்குள் ஏதாவது ஏடாபூடாமாய் செய்து விடுவார்களா? அப்படிச் செய்யாது தடுக்க வேண்டும். அதற்கு முதலில் இவர்களை நான் ஸ்தீக்கை மறந்துவிட்டேன் என நம்பச் செய்ய வேண்டும். நம்பவைத்து கழுத்தறுக்க வேண்டும். அவள் எண்ணியதே நல்ல வழியாய் தோன்ற அவள் தன்னை அதற்குத் தயார் படுத்திக் கொண்டாள்.

அனு கண்களில் இருந்த நீரைத் துடைத்த அதேவேளை அவள் மனதில் இருந்த கவலையில் ஒருபகுதியும் இறங்கிக் கொண்டது.

விமான நிலையத்திலோ அல்லது விமானம் பறப்பட்டுச் செல்லும் வரையோ அனு எந்த ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. இது வேந்தனுக்கும் அன்னத்திற்கும் பெரும் வியபிபைத் தந்தது. அத்தோடு அனு இந்தளவிற்காவது ஒத்துளைத்தாளே என்பதில் இருவருக்கும் பெரும் நின்மதி கிடைத்தது.

வேந்தன் இங்கு குடும்பத்தை வரவழைத்தான். அப்போது இங்குவந்தபின்பு அவர்கள் வாழ்கையில் இப்படியெல்லாம் மாற்றம் எற்படும் என ஆழச் சிந்தித்திருக்கவில்லை. இங்குவந்தபின் கைநீட்டி அடிப்பது ஒன்றைத் தவிர்த்துவிட்டு இலங்கையைப்போன்று மற்ற எல்லா அதிகாரமும் பண்ணலாம் எனத்தான் எண்ணி இருந்தான். அன்னத்திற்கு வந்த சிலநாள்களிலேயே கவலை தொற்றிக் கொண்டது . அவள் அதை வெட்ட வெளிச்ச மாக்கி இருந்தும் , வேந்தன பெரிது படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

வேந்தன் பெரிதுபடுத்தாதது அன்னத்திற்கு கவலையைத் தந்தது. இருந்தாலும் இவ்வள சீக்கிரமாய் யாரும் காதல் லீலையில் மாட்டுவார்கள் என எண்ணி இருக்கவில்லை. அப்படி யாரும் மாட்டுவதற்கிடையில் சியாமிழிக்கு பேசுவதுபோல , யாருக்காவது பேசி ஒழுங்கு செய்து , எல்லோரையும் முறைப்படி அனுப்பி விடலாம் என எண்ணி இருந்தாள். ஆனால் அன்று வேந்தன் அனுவைப்பற்றிய விடயங்களைக் கூறும்போதுதான் தனது எண்ணத்தில் இடிவிழுந்திருப்பது புலப்படத் தொடங்கியது.

சியாமிழி சற்றுக் காதலை எதிர்ப்பது போல் காட்டிக் கொண்டமையால் சியாமிழிமீது இப்போதும் இருவருக்கும் நம்பிக்கை இருந்தது. கௌவ்ரிக்கு வயது வராததால் அவளைப்பற்றி எவரும் இன்னும் கவலைப்படத் தொடங்கி இருக்கவில்லை. இப்போது அவர்கள் முன்பு பூதமாய் நிற்பது அனுவின் காதல் . இதைப்பிரித்து அழித்துவிட்டால் காதல் என்னும் பேயின் அட்டகாசம் தங்கள் குடில்மீதுபடாது என எண்ணிக் கொண்டனர். இவர்களின் இந்தக் கணிப்பு சியாமிழிக்குச் சாலப் பொருந்தினாலும் அனுவைப் பொறுத்தமட்டில் தப்புக் கணக்காய் போய்விடும் என்பதை இருவரும் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

# 12

இடத்தை மாற்றி விடுவதால் மனதையும் மாற்றிவிடலாம் என எண்ணினர் வேந்தனும் அன்னமும். நவீன உலகத்தில் தொலைத் தொடர்புகள் எழிதாகி விட்டது. ஆயிரம் மையிலுக்கப்பால் இருப்பவர் நெஞ்சை அரைநொடியில் அறிந்துகொள்ளும் விஞ்ஞான வசதியை நாம் பெற்றுவிட்டோம். அன்னமும் வேந்தனும் ஏனோ இதை எண்ணிப் பார்க்க மறந்துவிட்டனர். மரத்தில் பூத்ததை பிடுங்கி எறிந்துவிடலாம் . ஆனால் மனதில் பூத்ததை?....இப்படி ஒருநிலைமை ஏற்பட்டிருக்கக்கூடாததென்றால் இந்த நாடு அதன் சுகந்திரமான கலாச்சாரங்கள் தெரியாது இலங்கையையும் தமிழ் கலாச்சாரத்தையும் மட்டுமே நகர விட்டிருக்க வேண்டும். அதுகூட காதலை நிறுத்தும் என உத்தரவாதம் தந்துவிடாது. இங்கு இவ்வளவுக்கு சுகந்திரம் அதிகமாக இருக்கிறது , உங்களுக்கு மாத்திரம் குறிப்பிட்ட அளவிற்கு சிறியதாயே அதை வழங்கலாம் என்றால் , எவர் மனதுதான் அந்தச் சுகந்திரத்தை முழுமையாக அனுபவிக்கத் துணியாது ? இவர்கள் கொடுக்கும் பிச்சையை யார் மனது ஏற்றுக் கொள்ளும் .

வேந்தன் இங்கேயும் அன்னம் விமானத்திலேயும் அனுவை நோர்வேயில் இருந்து பிரித்ததால் இந்தப் பிரச்சனைக்கு முடிவாகிவிட்டது என எண்ணிக் கொண்டனர். அனுவின் மனம் இனி இவர்களை நம்பவைத்து கழுத்தறுக்க வேண்டும் என பதில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

கொழும்பில் இறங்கியவுடன் உஷ்ணம் தாங்கமுடியவில்லை. வியர்வை உடலைத் தெப்பமாக்கியது. உடம்பு இயற்கையாக சூரியனிடம் இருந்து பாதுகாப்புத் தேடிக் கொண்டது. கண்களை இமைகள் தங்களால் முடி தக்கவிதத்தில் தற்பாதுகாப்பு பண்ணிக் கொண்டன. அப்படி இருந்தும் வெளியே பார்க்க முடியவில்லை. உடல் எரிவைத் தாங்கவும் முடியவில்லை. பல உருட்டல் பிரட்டலான விசாரணைகளைச் , சோதனைகளை ஒருவாறு முடித்துக் கொண்டு விமான நிலைத்தில் இருந்து பிதுங்கிக் கொண்டனர்.

வெளியே அன்னத்தின் தம்பி இவர்களுக்காக கண்களில் பாசத்தை தேக்கிவைத்துக் கொண்டு கால்கடுக்க காத்து நின்றார். அனுவுக்கு இப்போது சிறிது பயமாய் இருந்தது. எந்தப்பயமும் இன்றி நோர்வேயில் வாழக்கூடியதாக இருந்தது. சொந்த நாட்டில் யாரைப் பார்த்தாலும் பயமாக இருந்தது. றமணன் மாமாவைப் பாக்க எந்தக் காரணமும் இல்லாமலே வெறுப்பாய் இருந்தது. இவர் தனது மகன்களில் எவனுகாவது என்னைக் கட்டி வைத்துவிடுவாரோ எனப் பயமாக இருந்தது. எண்ணங்கள் தொடர்ந்து பறக்கமுடியவில்லை. வாடகைக் வாகனத்தில் ஏறுமாறு மாமா அவசரப்படுத்த வாகனத்தின் ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டாள் அனு.

கொழும்பிற்குவந்து ஐந்து நாள்கள் ஆகிவிட்டது. இந்த ஐந்து நாள்களும் மாமாவீட்டிலேயே அன்னமும் அனுவும் தங்கி இருந்தனர். அம்மா திரும்பிப்போகப் போவதாய் அனுவுக்கு அரசல்புரசலாக தெரியவந்தபோது அவளுக்கு என்ன செய்வதென்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரியவில்லை. நோர்வேயில் நடந்த அனைத்து விடயத்தையும் அம்மா மாமாவிடம் கக்கிவிட்டது மாமாவின் பார்வையில் இருந்தே புரியக் கூடியதாக இருந்தது. மாமாவின் முதல்பையன் விக்னேஸ் யாரையோ காதலிக்கிறான் என்பதால் அவனால் அனுவிற்கு எந்தப் பிரச்சனையும் வராது என்பதில் மகிழ்ச்சியாய் இருந்தது. ஆனால் தினேஸ் அடிக்கடி உறவுகூறித் தனகுவது அனுவிற்கு அறவும் பிடிக்கவில்லை. அவர்கள் வீட்டில் இருந்து கொண்டு அவனை எதிர்த்து நேரடியாக சண்டைபோடவும் முடியவில்லை. தொடர்ந்தும் அனு இங்குதான் தங்கவேண்டிய கட்டாயமும் இருந்தது. அனு வலுக்கட்டாயமாக மௌனத்தைத்தான் அரவணைத்தாள். ஸ்தீக்கின் நினைவு அடிக்கடி அவளைத் தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தது. ஸ்தீக்கிற்கு எப்படிக் கடிதம் அனுப்புவது ? அவனுக்கு யார் விலாசத்தைக் கொடுப்பது ? என்பனவற்றிற்கு இன்னும் விடைகள் கிடைக்காது வேதனையை ஊற்றெடுக்கச் செய்தது.

அன்னம் திரும்பி நோர்வேக்குப் போய் இரண்டு நாள்கள் ஆகியிருந்தன. தம்பியின் உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டு அன்னம் திரும்பி செல்வதாய் முடிவெடுத்த போது அனுவால் எதையுமே நம்ப முடியவில்லைத்தான். கொழும்பிற்கு வந்ததிற்கு வெளியே எங்கும் சென்றதில்லை. அனுவிற்கு தான் இருந்த மனநிலையில் வெளியுலகைப் பற்றிச் சிந்திக்க வேட்கையும் இல்லை வெறுப்பும் இல்லை.. ரமணன் மாமாவீட்டில் இருப்பதிலும் எங்கயாவது போயிச் சாகலாமோ என சிலகணம் தோன்றுவது உண்டு. ஸ்தீக் என்கின்ற நம்பிக்கை அவளைத் தடுத்தது. சிந்தனையில் தொடர்ந்தும் நீந்திக் கொண்டிருந்தவளை தினேஸ் கீண்டினான்.

கலோ! என்ன ஈரோப்பா கனவில இருக்கிறா போல இருக்கு.
அனு நிமிர்ந்து தினேசைப் பார்த்த பார்வை அவனை ஏதோ செய்திருக்க வேண்டும்.
சொறி.................என்றான்.
உம்மட சொறி எனக்குத் தேவையில்ல. இங்க இருக்க அலுப்படிக்குது. எங்கயாவது வெளிய போகோனும்.
வவ் சூவுக்கு போவமா இல்லாட்டி கோல்பேஸ்.
நோ . நான் அப்பிடியான இடத்துக்கு இப்ப போக விரும்பல்ல.
ஏன் என்னோட வரப்பிடிக்கல்லையா ? இல்லாட்டி அந்த இடங்கள் பிடிக்கல்லையா?
ரெண்டும் இல்ல. முதல்ல கீழ்வீடுகள் பக்கத்திவீடுகளத் தெரிஞ்சுக்கோணும் அதுதான்.
ஓ .கே உனக்கு அப்செற் தாறமாதிரி ஒரு வீட்டுக்கு கூட்டிட்டுப் போறன்.
எங்க தினேஸ்?
இப்போது புன்னகைப் பூஒன்று பூத்திருந்தது. இந்தப் பெண்ணவள் வதனத்தில்.

அது சஸ்பென்ஸ் .
எனக்கூறிக் குறும்பாய் சிரித்தான் தினேஸ். அப்படிச் சிரிக்கும் போது அழகாய்த்தான் தோன்றினான் அவன்.

அனு தினேசுடன் அவ்வீட்டிற்குள் நுளைந்தாள். " வாவ்" அவள் எதிர் பார்க்கவே இல்லை. ஊரில் பக்கத்தி வீட்டில் குடிஇருந்த தங்கம்மா மாமியும் ஜெயந்தியும் உள்ளே இருந்தனர். இவளுக்கு மாத்திரம் இந்த இன்ப அதிர்ச்சியல்ல ஜெயந்திக்கும் அதே இன்ப அதிர்ச்சிதான். ஜெயந்தி மனதில் "இவள் எங்கே இங்கு வந்தாள் நோர்வைக்கல்லவா போயிருந்தாள்" என்னும் கேள்வி பிறந்தது.

பின்பு அறிமுகம் இங்கு அவசியமற்றுப் போகவே தினேஸ்சை மறந்து ஜெயந்தியுடனும், தங்கம்மா மாமியுடனும் அனு ஒன்றிப்போய் விட்டாள்.

இனிமையான பொழுதுகளில் காலம் எவ்வளவு இலகுவாக கரைந்து விடுகின்றது? நேரம் ஏழாகியதை உணராது அனு கதைகளில் மூழ்கி இருக்க , அலுப்புடன் தினேஸ் வீட்டிற்கு போவோம் எனக்கூறினான். ,ஜெயந்தி இரவு இங்கு தங்கவேண்டுமென கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். தினேசிற்கு ஜெயந்திமீது நியாயமான கோபம் என்றாலும் அதைக் கொட்டித் தீர்த்துவிட முடியாத அவஸ்தையுடன் அனுவின் அலட்சியமான டாட்டாவை வேண்டிக் கொண்டு வெளியேறினான்.

உயிர்த்தோழி என்றால் அனுவைப் பொறுத்தளவில் அது ஜெயந்தியைத் தவிர வேறு ஒருவரையும் எண்ணிவிடவோ அல்லது கூறிவிடவோ முடியாது. அந்த உயிர்த்தோழியிடம் தனது நோர்வேக் காதல் வாழ்கை, அதற்கு உண்டான எதிர்ப்பு , அம்மா அப்பாவின் திட்டம், தான் என்ன செய்ய வேண்டும் என அசைப்படுகிறாள் , என்பதையெல்லாம் கொட்டித் தீர்த்தாள். ஜெயந்திக்கு ஆச்சரியமாய் இருந்தது. முதலில் எதிர்த்தாள். பின்பு அனுவின் மனதைப் புரிந்துகொண்டு உதவுவதாய் ஒப்புதல் அழித்தாள். அப்போதுதான் அனுவுக்கு உயிர்வந்தது. பின்பு தான் ஸ்தீக்கிற்கு கடிதம் எழுதவேண்டிய அவசியத்தையும் , அதற்கு ஒரு இரகசிய முகவரி வேண்டிய அவசியத்தையும் ஜெயந்திக்கு விபரிக்க , ஜெயந்தி சிறிது நேரம் சிந்தித்தபின்பு தனது டயரியில் இருந்து ஒரு முகவரியைக் குறித்துக் கொடுத்து.
ஏய் இந்த அட்றசுக்கு எழுதச் சொல்லு, நான் வேண்டியந்து தாறன்.
அனு ஆனந்தக் கண்ணீருடன் ஜெயந்தியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

சிறிதுநேரத்தில் ஜெயந்தியின் கையைவிட்டுவிட்டு அனுவின் கை பேனாவிற்குப் பரபரத்தது. அன்னமும் வேந்தனும் இரும்புத் திரையாய் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் இன்னும் சில மாதங்களில் நிட்சயமாகப் பனிப்பூக்களாய் மாறும் என்பதில் அவளுக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. (தொடரும்)

## அனுபவப் பந்தல் - { புதுக்கவிதை }

கு.வேலுசாமி
பகாங், மலேசியா

**இன்றைய இளைஞனே !**
**உனக்கு**
**என் தலை மொட்டு**
**வணக்கங்கள் !**

**நாளைய விடியல்களுக்காக**
**நாடும் நகரங்களும்**
**நம்பிக்கையோடு**
**நடந்து கொண்டிருக்கும்**
**இந்த 2020**
**நாலிலக்க சாதனைகளுள்**
**நீ மட்டும்**
**ஏனோ**
**மழையில் கரையும்**
**எழுத்துகளாய்**

**விஞ்ஞான மலைகள்**
**மலேசியாத்தின்**
**உன்னத உருவங்களாய்**
**உருமாறிக் கொண்டிருக்கும்**

**இந்த**
**கதிரவம் பிறப்பினிலே**
**நீ மட்டும்**
**கடலில் ஒளியும்**
**ஒற்றை நதியாய்.**

**என் இனிய இளைஞனே !**
**நேற்றைய தேடல்களில்**
**இன்று**
**வழி மாறி விட்டவனே -**
**வழி மறந்து விட்டவனே !**

**கட லில் விழவைக்க**
**எண்ணியா**
**மேகம் மழைத்துளிகளைக்**
**கருத் தரிக்கிறது ?**

**தென்னை முடிந்து வைத்திருக்கும்**
**தேனிலா நீர்களினால்**
**தெங்கிற்கு என்ன பயன் ?**

**நாளை என்பது**
**நாளை தொடங்குவதல்ல**
**நண்பனே !**

**நேற்றைய அனுபவங்களின்**
**சேர்க்கை**
**இன்றைய நடப்புகளின் காரம் !**

**அதுவே**
**நாளைய வெற்றிகளின்**
**நாற்றுகள் ...**

**என் இனிய இளைஞனே !**
**சிந்தி**
**தன்னம்பிக்கை முனைகளை**
**அடையாளம் காண்.**
**பின்**
**தென்றல் சுகத்தை**
**நோக்கி**
**நகர்ந்துப் போ.**

**உனது நிர்மாணிப்பின்**
**சுவாசிப்பில்**
**சில**
**அழுக்குகள் கரையட்டும்.**

**அன்று**
**உன்னால் இந்த**
**இருட்டுகள் வெளிச்சம்**
**பெறட்டும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SRI KANTH & CO

SKC

## SOLICITORS

First Floor, 604 High Road, Wembley, Middx. HA0 2AF

*(Entrance on ViaSide Road)*

**Tel: 0181 795 0648** (5Lines)

**Sri: 00831 195979** (Mobile)

Mrs M.Jay: **0374 637298** (Mobile)

***LEGAL AID WORK UNDERTAKEN***

***Available late evenings- weekends by prior appointment***

# PARAM & CO

**Solicitors**

"Segaram House"

21 Edgware Road, Colindale,

London NW9 6LP

Tel: 0181 200 3500

Fax:0181 200 1360

**S Paramalingam BA, LLM**

**Assistant Solicitors:**

**Miss Hina Rajshakha LLB Hon**

**Miss Anixa Maru LLB Hons**

**Mrs Nithy Sivasanthiran**

# PALM BEACH

***FULLY LICENSED***

***Finest Sri Lankan & South Indian Cuisine***

***Specialised in Catering for***

**WEDDINGS & PARTIES**

**17 EALING ROAD**

**WEMBLEY**

**MIDDLESEX HA) 4AY.**

**TEL:0181 900 8664**

**WE NEWLY OPEN BRANCH AT**

**PALM BEACH**

**18 THE AVENUE**

**WEST EALING**

**LONDON W18 8JL**

**TEL:0181 810 6606**

**12.00 NOON TO 3.00PM**

**6.00PM TO MIDNIGHT**

**OPEN 7 DAYS A WEEK**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ISSN:0805-7443 15,-Nkr

SARVADESA TAMILER
C-BLAD



Editor: N.S. Pirabu B.Sc,.Dip. Jour. (U
L.Hervigs vn. 69A, 3035
Drammen, Norway
Tel./Fax: 32.813416
E.mail:nsp@oslonett.no

**சர்வதேசதமிழர் 1996**
**புரட்டாதி-ஐப். தொ.3, இல.5**

**ஆசிரியர் கருத்து:**
**தமிழர்களும் அறியாமையும்!**

மனிதர்கள் சிலர் அறியாமையால் தாமும் துன்பத்துள்ளாகி பிற அப்பாவி மனிதர்களையும் துன்பத்திற்கும், அவலத்திற்கும் ஆளாக்குகின்றனர். தாம் எங்கு நிற்கிறோம்? என்ன செய்கிறோம்? என சுயவிமர்சனம் செய்யவிரும்பாத, செய்யத்தெரியாத சிலமனிதர்களால் பெரும்பான்மையான மௌனமனிதர் பெரும் ஆபத்துக்குள்ளாகின்றனர். அன்றைய மௌனம் இன்றைய அவலத்துக்கு வழிகோரும். இன்றைய மௌனம் நாளைய அழிவுக்கும் காரணமாகும். மனிதர் மௌனம் கலைவதும் கடினமான காரியம். ஏன் ஆபத்தானதும் கூட!

வீரமும், செல்வமும், கல்வியும் (விவேகமும்) மனிதர் முதன்மைகள். இதில் ஒன்று மீறி மற்றவை தாழின் அது ஆபத்தாக முடியும். சிலகாரியங்கள் பெரும்பான்மையர் விருப்பு, வெறுப்பு அறியாது ஒருசிலரால் முடிவெடுக்கப்படுகின்றன. அதன் விளைவுகள் அப்பாவி மனிதர்களால் அனுபவிக்கப்படும். அறியாமை நிரம்பிய சில அரசியல் தலைவர்களால் நாடும், மக்களும் நாசகாரமாகின்றன. தமது முடிவுகட்கு விளக்கமும், வியாக்கியானமும் மிகத்திறமாகவே அளிக்கிறார்கள். அவர்கட்கு ஆமாம் சாமி! போடுபவர்களோ தம்சுயநிலைகளைப் பலப்படுத்தியவர்களாகவே உள்ளனர்.

ரஷ்யாவால் நடாத்தப்பட்ட, செச்னியா முற்றுகையும், நாசகாரமும் அலக்சாண்டர் லெபெட் எனும் புத்திசாலி மனிதனால் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. உலகில் யுத்தமே தீர்வு! என எண்ணும் அறிவிலிகளுக்கு இது ஒருபாடம்! யுத்தத்தால் புத்திசாலிகள் தப்பிப் பாதுகாப்பாகி விடுவர்! வியாபாரிகள் பணமும் பண்ணிக்கொள்வர்! அப்பாவிகளும், ஏழைகளும் மாட்டிக் கொள்வர்! இது லெபெட் கூறிய வாசகம். உலகெங்கும் இந்தவாசகம் கச்சிதமாகப் பொருந்துகிறது.

இவற்றிலிருந்து இறுதியில் மனிதர் பெறுவது பாடம்! எனில் அது நல்லது. ஆனால் பாடம்படிக்க, அறியாமை உலகுக்கு இடம் தராது. தமிழர்கள் அறியாமையை அகற்றி அறிவை சகலமட்டத்திலும் வளர்த்துக்கொள்ள பாடுபடவேண்டும்.

சர்வதேச தமிழர் தகவல்சேவை

**1. நோர்வே, புதியபிரதமர் தூார் பியோண் யக்லாந்த் (தொழிற்கட்சி) 25.10.96, பதவியேற்றார்.**

அன்று மாலை–டாக்பிளாத–பிரபல பத்திரிகைஅலுவலகத்திலிருந்து பிரசைகளின் கேள்விகட்கு, தொலைபேசியில் பதிலளித்தார்.

இலங்கையில் சிங்களபடை முற்றுகையால் துன்புறும் தமிழர்கட்கு அமைதி வேண்டி தூதராக தேர்ய லார்சனை (இஸ்ரேல்–பாலஸ்தீன ஒப்பந்தத்துக்கு காரணர்) அனுப்பி உதவுவீர்களா? எனும் சர்வதேசதமிழர்–ஆசிரியர் கேள்விக்கு, அது நல்ல ஆலோசனைதான்! ஆனால் நோர்வே எல்லாப்பிரச்சனையும் தீர்ப்பது கடினம்! என பதிலளித்தார்.

**2. தமிழர் சுயநிர்ணயஉரிமை போராட்டம்-கருத்தரங்கு.**

லண்டன் ஏலிங் நகரமண்டபத்தில் 26,27.09.96ல் சர்வதேசதமிழர் சம்மேளனத்தால் (Intl.Fed.of Tamils, 17, Birchview close, yately, camberly, Surrey, GU 17 7DL, U.K.) நடத்தப்பட்டது. பிரிட்டிஷ் எம்.பி.பி.காப்ரா, எஸ். மகரசிங்கம், ஜே.கரன், யாழ்.ஆயர்.எஸ். ஜே.இமானுவல், முன்னாள் ரூபவாகினி கூ.தா.தலைவர் வசந்தராஜா, பிரி. தொழில்கட்சி வேட்பாளர் பாரி காடினர், பிரி.எம்.பி. டெறிக் பாசெட், இலங்கை நவசமசமாசகட்சி தலைவர் டாக்டர்.விக்ரமபாகு கருணரத்ன, சி.சிதம்பரபிள்ளை, தமிழர் மனித உரிமைஇயக்கபிரதிநிதி மதுரா ராசரட்ணம், எம்.பி.க்கள் கிறிஸ்ரின் ஒடிறொபேட்கியுஜஸ், தமிழ்நாடு பாட்டாளி மக்கள்கட்சி தாபகர் டாக்டர். ராமதாஸ், தலைவர், பேராசிரியர்.தீரன் எம்.எல்.ஏ. பிறன்ட் மேயர் லதா பட்டேல், சி.ஜே.ரி.தாமோதரம், டாக்டர் அர்சுனா சிற்றம்பலம், எல்சல்வடோர் விடுதலை முன்னணி, சக்பிறிடோ றியஸ், தென்ஆபிரிக்க கோபால் வீரபத்திரன், பேராசிரியர் சூர்யா சுபேதி, டாக்டர்.என்.சச்சிதானந்தன், அட்றியன் விஜேமான, எஸ்.ஜே.பத்திமாகரன் ஒக்ஸ்போட் ஆய்வாளர் ஆகியோர் உரையாற்றினர்.

பார்வையாளராக –சர்வதேசதமிழர்– ஆசிரியரும் கலந்துகொண்டார்.

**3. இலங்கையில் பலதமிழர்கள் காணமல் போவது குறித்து கண்டனம் அனுப்பல்:**

Her Excellency President of Sri Lanka: Fax. 00.94.1.333703

His Excellency President of U.S.A. Fax.00.1.202 4562461



பேராசிரியர். வ.மாசிலாமணி குமுதம் ஆசிரியர் மாலன்

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்

பெயர்
நோர்வே:
தி.திலீபன் (ஒஸ்லோ)
கு.பாலதாஸ் (ஒஸ்லோ)
என். ஜெயதரன் (பேர்கன்)
ஐ. றோயலா (பேர்கன்)
த. தியாகலிங்கம் (துரொண்ஹைம்)
அ.பாஸ்கரன் (ஸ்ரவங்கர்)
முபாரக்அலி (ஸ்ரவங்கர்)
ம. பஸ்ரியன் (கிரீஸ்ரியன் சான்ட்)
பொன் சிவா (ஏகவண்ட்)
கே. சிவராஜா (துறம்சோ)
இ.தியாகலிங்கம் (ஒஸ்லோ)
க.இரா. விஜய் (பேலவோக்)
க.சுரேஸ்கரன் (போட்ஸ்பியுட்)
பா. பாலேந்திரன் (ஒஸ்லோ)
எஸ்.தங்கராஜா (பிறத்வோக்)
பிரிட்டன்:
செ.ஆனந்தவரதன்
ந.பாலமுரளி
திருமதி.த.மனேகரன்
மு.ஆறுமுகம்
கிருஷ்ணா வைகுந்தவாசன்
செ.நாகேந்திரன்
கனடா:
பா.சிவலிங்கம்
இ.வளர்மதி
இந்தியா:
பேராசிரியர் வ. மாசிலாமணி (சென்னை)
பேராசிரியர் ஜ.இராமச்சந்திரன்
திரைக்கலைஞர் பிரசாந்த்
மாயூரம் பாஸ்கரன்
இரா.ரகுபதி, ஜான்ராஜ்தேவர் (திருச்சி)
இரா.இரவி. இலக்ஷ்மணசுவாமி (மதுரை)
ச. வேல்முருகன் (புதுச்சேரி)
பி.சத்தியநாராயணன் (கல்கத்தா)
இரா.ஜெயசேதுபதி (டெல்லி)
கதிர்.சம்பத்குமார் (டெல்லி)
ச.வெள்ளிங்கிரி, டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம் (கேரளா)
என்.ஆர்.இலட்சுமணன் (கைதராபாத்)
ரஷ்யா/மாஸ்கோ:
ஆர்.சுகுமார்
அ.றிக்சன் (அல். கதிவ்)
.யோகநாதன் (றியாட்)
எஸ்.காளிதாஸ் (ஜித்தா)
நஜீர். முகமது, (பாஹ்ரெயின்)
அப்துல்கனி, எம்.ஐ.ரபீக் (துபாய்)
எஸ்.கண்ணன், கணேசலிங்கம் (ஓமான்)
எம்.என்.பாலாஸ், பி.ஜெகதீசன் (சுவீடன்)
கா.செந்தில், த.புவனேந்திரன் (ஜேர்மனி)
எஸ்.அருள் (நெதர்லாந்த்)
கோபி.ரவி (மட்டக்களப்பு)
எம்.எஸ். அருள்பிரகாஸ், தவ.சஜிதரன் (மாத்தளை)
மதுமாரி, செ.கனகரத்தினம் (திருகோணமலை)
டாக்டர்.ரி. அப்புலட்சுமி (லிபியா)
எஸ்.மயில்வேந்தன் (கண்டி)
பாலா சங்குப்பிள்ளை (லண்டன்)
முகமதுகவுஸ், வீ.எம்.லிங்கன் (குவைத்)
எஸ். கதிர்காமநாதன், இரா.கலாதரன் (சுவிற்சலாந்து)
செ.பாஸ்கரன் (அமெரிக்கா)
பத்மா ஞானப்பிரகாசம் (அவுஸ்ரேலியா)
ஏ.யு.எல். ஏ.ஹில்மி (தென்கொரியா)
கமலா வேலுப்பிள்ளை (பொற்ஸ்வானா)
வீ.ஸ்.சிவக்குமார் (புருணை)
டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா (யப்பான்)
மு.பத்மா,மணி (சிங்கப்பூர்)
க.மாணிக்கவாசகர், க.கணேசன், இரா.ந.வீரப்பன் (மலேசியா)
நாகலிங்கம், மு.சந்திரசேகரன் (மெடான்,இந்தோனேசியா)
திருமதி.மணி (ஜகார்த்தா,இந்தோனேசியா)
வே.நாகராஜா (தாய்லாந்த், பாங்கொக்)
மெ.வேலு, நா.சங்கரன், லட்சுமணன் (புக்கற்)
அப்துல்ரசாக் (பர்மா)
ச.யோகேந்திரம், வ.க.பரமநாதன் (டென்மார்க்)
செ.ஜெயகுமார், க.தர்மசீலன், இ.கிருபானந்தன் (பிரான்ஸ்)
வீ.கங்கைவேணியன், வீரன், காசண்முகலிங்கம் (கொழும்பு)
டாக்டர். நா.வேல்முருகு (பேராதனை)
திருமதி. பி.கம்ஹானந்தி (யாழ்ப்பாணம்)